உ

கடவுள்துணை.

# செந்தமிழ்

தொகுதி-கசு.] காலயுக்தி-ஸு புரட்டாசிமீ [பகுதி - கக.

Vol. XVI. September—October. 1918. No. 11.

## சளுக்கிய விக்கிரமாதித்தன் சரித்திரம்

### (இரண்டாம்பாகம்.)

### விக்கிரமாதித்தன் இளமையும், தந்தைக்குத்துணையாக அவன்காட்டிய போர்த்திறமும்.

**விக்கிரமாதித்தன் ஜனனம்.**

ஆகவமல்லன் இவ்வாறு ஜயங்கொண்டு மகிழ்ந்திருந்தபோதிலும் மக்கட்பேறில்லாப் பெருங்குறையொன்று அவனைப்பிடித்துத் துயரக்கடலில் வீழ்த்திற்று. முன்னோரிடமிருந்து முறையே வந்த ராஜ்யலக்ஷ்மியும் இவனுக்குப்பின் தனக்குப்பற்றுக்கோடின்மையால் ஏக்கமுற்று கடலிடையே கப்பலின் பாய்மரத்திற்றங்கிய பறவையைப்போலத் தத்தளித்துக்கொண்டிருந்தாள். ஆகையால் ஆகவமல்லனும் தன் ராஜ்யத்தை அமைச்சரிடம் ஒப்பித்துத் தங்கள்குலதெய்வமாகிய சிவபிரானுடைய பிரசாதத்தால் மக்களையடையவிரும்பித் தானும் தன் மனைவியும் எல்லா ஆடம்பரங்களையும் ஒழித்துக் கோயிலுக்குச்சென்று கடுமையான தவஞ்செய்தார்கள். சிவபிரானும் திருவுளமுவந்து அருள்கூர்ந்து முன்தோன்றி அவர்களுக்கு மூன்றுமக்கள் பிறப்பார்களென்றும் அவர்களில் இரண்டாம்புத்திரன் தம்முடைய முழுக்கருணையைப்பெற்று, குணம் பராக்கிரமம் முதலியவற்றில் பண்டையரசர்களெல்லோரினும் மேம்பட்டவனாக விளங்குவானென்றும் அருள்புரிந்தார். அவ்வாறே அரசியும்

நாளடைவில் சோமேசுவரன் விக்கிரமாதித்தன் ஜயசிங்கனென்னும் மூன்றுமக்களையும் முறையேபெற்றுக்களிகூர்ந்தனள். தேவரெல்லாம் மகிழ்ச்சியடைந்து அலர்மழை பொன்மழைவருஷித்தனர்.

இவ்வாறு பில்ஹணகவி (1) சொல்லியிருப்பதிலிருந்து ஆகவமல்லன் அரசுபுரியத்தொடங்கிப் பலவருஷங்களுக்குப்பின்னரே (அதாவது கி. பி. 1042-க்குப்பின்பே) அவனுக்கு மக்கள் பிறந்தார்களென்று கொள்ள இடமுண்டாகிறது. இது சரித்திரசம்மதமாகுமா? சாசனங்களின் (2) உதவியால் சீர்தூக்கிப்பார்த்தால் இதை அங்கீகரிப்பது கூடாததாகிறது. கி. பி. 1053 இலேயே பெலுவோலா புலிகிர் பிராந்தியங்கள் மூத்தகுமாரனான சோமேசுவரனுடைய அதிகாரத்தின் கீழும், கி. பி. 1055 இல் கங்கபாடி, வனவாசி, சாந்தலிஜ், நொளம்பபாடி என்னும் மாகாணங்கள் இரண்டாம்குமாரனான விக்கிரமாதித்தன் ஆட்சிக்குள்ளும் இருந்தனவென்பது வெளியாகிறது. ஆகவமல்லன் இவ்வாறு தன் ராஜ்யத்தின் எல்லையிலிருந்த முக்கியமாகாணங்களை இவர்கள் கைவசத்தில் விட்டிருந்ததனாலேயே இவர்கள் அப்போதே உரியபிராயமடைந்து ஆளுந்திறமையும்பெற்றிருத்தல்வேண்டும். ஆகையால் ஆகவமல்லன் பட்டத்திற்குவருமுன்னமேயே இவர்கள் பிறந்திருத்தல்வேண்டுமென்று எண்ண இடமுண்டாகிறது. இதனைத் துணிந்துரைக்கவும் கூடும். ஏனெனில் சோழவம்சத்து ராஜாதிராஜனது 29 ஆம் ஆண்டு சாசனத்தில் (3) (அதாவது கி. பி. 1047-இல்) 'இண்டிறல் விருதர்விக்கி' யென்று சொல்லப்பட்டவன் பின் சோழ சாசனங்களில் விக்கலன் அல்லது விக்கிரமாதித்தனென்று கூறப்பட்டவனேயாம்.(4) அவன் சண்டைசெய்யும்வன்மையுடையவனாயிருந்ததோடு விரோதிகளாலும் புகழப்பட்டவனாயிருந்ததால் அப்போது அவனுக்குக்குறைந்தது 16 - வயதாகிலும் இருந்திருத்தல்வேண்டும்.

---

1. விக். சரி. II-25-91.
2. Bom. Gaz. IV. 440.
   Epi. Car. VII. S. K. 83. 11, 152.
   Ind. Ant. IV. 303. முல்குண்டு சாசனம்.
3. S. I. I. III - 56.
4. Do.

எனவே சற்றேறக்குறைய கி. பி. 1031 இலேயே விக்கிரமாதித்தன் பிறந்திருத்தல்வேண்டும். இதற்கு இரண்டு மூன்றுவருடமுன்னரேயே தமையனாகிய சோமேசுவரன் ஜனித்திருத்தல்வேண்டுமென்பது சொல்லாமலே அமையும். ஒருக்கால் மூன்றும்மகனாகிய ஜயசிங்கன்மட்டும் ஆகவமல்லன் அரசெய்தியபின்னர் பிறந்திருக்கலாம். ஏனெனில் அவன் பெயர் கி. பி. 1063-4 வருஷத்திய சாசனத்தில்தான் (5) முதல் முதல் காணப்படுகிறது.

உண்மை இங்ஙனமிருக்க, பில்ஹணகவி மாறுபாடாகக்கூறியதற்குக்காரணம் என்ன? புகழ்பெற்று விளங்கிய விக்கிரமாதித்தனை ஈசுவரானுக்கிரகம்பெற்றவனென்று சிறப்பித்துரைப்பதற்கே போலும். நிற்க.

இம்மூன்று புத்திரரும் ஒருதாய்வயிற்றுப்பிள்ளைகளா அல்லவா என்ற கேள்வி எழுகின்றது. சோமேசுவரன் விக்கிரமாதித்தன் இவர்களுடைய கங்கபிருதுகளால் கங்கவம்சத்தரசியின் பிள்ளைகளென்றும் ஜயசிங்கனுடைய பல்லவபிருதுகளால் அவன் பல்லவகுலத்தரசியின் புத்திரனென்றும் ஆகவே மூவரும் வெவ்வேறுமனைவிகளின்மக்களாக இருத்தல்வேண்டுமென்றும் டாக்டர் ரைஸ் (6) அபிப்பிராயப்படுகிறார். ஆனால் இவ்வபிப்பிராயத்துக்குச்சிறிதேனும் இடமில்லை. கங்கமாகாணங்களின்எல்லையைப் பாதுகாத்துவந்தமையால் கங்கபிருதுகளும் பல்லவதேசத்தெல்லையைப் பாதுகாத்துவந்தமையால் பல்லவபிருதுகளும் கிடைத்திருத்தல்வேண்டும். இம்மாதிரியான வழக்கம் சோழர்களிடத்திலும் (7) வெகுவாய்க்காணப்படுகிறது. மேலும் விக்ரமாங்கதேவசரிதத்தில் (8) 'அரசே இந்த உன் மனைவியின்வயிற்றில் மூன்றுமக்களுண்டாவர்'என்று சிவபிரான்சொன்னதாக வெளிப்படை

---

5. S. I. I. III. No. 20. கருவூர்ச்சாசனம்.
   Epi. Rep. 113. A. of 1896.
6. Epi. Car. VII. SK. 136. Dg. 133. Cd. 12.
7. S. I. I. III. Part. I.
8. விக். சரி. II. 51.

யாகக்கூறப்பட்டிருக்கின்றது. டாக்டர் பிலீட் வெளியிட்ட கடக்சாசனத்திலிருந்தும் (9) மூவரும் 'ஆகவமல்லன் மூத்தமனைவியாகிய பாசலதேவியின் புத்திரரென்று வெளியாகிறது. ஆகையால் இவர்கள் சகோதரரேயன்றி வேறல்ல என்று துணியலாம். இப்பாசலதேவியும் பல்லவகுலத்தைச்சேர்ந்தவளாகவிருத்தல்வேண்டுமென்று தேவூர்ச் சாசனத்தைக்கொண்டு (10) ஒருவாறு ஊகிக்கலாம்.

**சோமேசுவரன் இளவரசாதல்.**

புத்திரர்கள் பல கலைகளையும் பயின்று பருவமுதிர்ந்தகாலையில் அறிந்து அரசரின்வழக்கப்படி ஆகவமல்லன் தான் அதிகாறும் வகித்துவந்த ராஜ்ய பாரத்தை ஒருவாறு குறைத்துக்கொள்ளுவதற்கும் அரசாளுமுறைமையில் மைந்தர்களைப்பழக்குவதற்கும்வேண்டித் தன் புதல்வரில் ஒருவனை இளவரசாக்க எண்ணங்கொண்டான். மூத்தகுமாரனான சோமேசுவரன் இளவரசுக்குரியவனாயிருந்தபோதிலும் அவன் தம்பி விக்கிரமாதித்தன் தமையனைக்காட்டிலும் புஜபலபராக்கிரமங்களில் மேம்பட்டவனாயிருந்தமையால் ஆன்றோரொழுக்கமும் உரிமையுமொருபுறமிருக்க தன் மனப்போக்கும் பொருத்தமும் மற்றொருபுறமாக ஆகவமல்லன் இன்னதுசெய்வதென்று தெரியாமல் குழப்பமடைந்திருந்தான். இக்குழப்பத்தை ஊகித்தறிந்த விக்கிரமாதித்தன் தமையனிருக்கத் தான் இளவரசாதல் தனக்கும் தன் தந்தைக்கும் சளுக்கியகுலத்துக்குமே பெரும் பழிக்கிடனாகுமாதலால் கூடாதென்றும் யுவராஜபட்டமில்லாமலே தன்னுவியன்றவூழியம்புரிவதாகவுஞ்சொல்லிவிட்டான். ஆகவே சோமேசுவரன் இளவரசாக நியமிக்கப்பட்டான்.

இங்ஙனம் இளவரசுவிஷயத்தைப்பற்றி பில்ஹணர் (11) கூறியது, வேணுமென்றே விக்கிரமாதித்தனைப்புகழ்ந்து சோமேசுவரனை இகழ்தலாகிய பக்ஷபாதமுடைத்தென்று டாக்டர் பூலர் (12) அபிப்பிரா

---

9. Ind. Ant. II. 297.
   Bom. Gaz. 438. N. 1.
10. Bom. Gaz. 440. N. 5.
11. விக். சரி. III. 26 - 59.
12. பூலர் பதிப்பு. விக். சரி. முகவுரை. 31. N. 1.

யப்படுகின்றார். ஆனால் இதில் அப்படி அதிகமாகப்பக்ஷபாதம் இல்லை யென்பது பிற்காலத்தில் இவர்கள் அரசுநடத்திய சீர்மையாலேயே யாவர்க்கும் தெற்றெனவிளங்கும். இது நிற்க. ஆகவமல்லன் குழப்ப மடைந்து உண்மையிலேயே இளவரசை இளையவனுக்குக்கொடுக்க விரும்பினனா அல்லது பில்ஹணகவி சாதுர்யமாக சகோதரரின் ஏற்றத்தாழ்வை எடுத்துக்காட்ட இவ்வாறு புனைந்துரைத்தாரா என்கிற முக்கியமான கேள்வி எழுகின்றது. ராஜ்யத்தின்பொருட்டாக நெடுங் காலம் பிரயாசைப்பட்டு அதன் அபிவிருத்தியையே நாடின ஆகவ மல்லன் வல்லமைவாய்ந்த இளையவனையே இளவரசாக்க இசைந்திருப் பானென்பது ஒருக்காலும் அசம்பாவிதமாகாது. ஆகவமல்லன் கேட்டதுண்மையாயின் விக்கிரமாதித்தன் மறுத்ததும் உண்மையே யாம். ஏனெனில் ஆகவமல்லனுடையகால்முழுதும் சோமேசுவர னே யுவராஜனாகவிருந்து தந்தைக்குப்பின் தம்பியால்யாதொருதடையு மின்றிச் (13) சிங்காதனமேறினான். ராஜ்யம் என்றால் சகோதரர் சண்டையிட்டேதீரவேண்டுமோ? (14) அல்ல.

---

13. 3 - ம் பாகம் பார்க்க.

T. 298.

14. அல்ல என்பதற்கு, சிலப்பதிகாரம் பார்க்க.
"வேள்விச்சாலையின்வேந்தன்பெயர்ந்தபி
னியாளுஞ்சென்றேனென்னெதிரெழுந்து
தேவந்திகைமேற்றிகழ்ந்துதோன்றி
வஞ்சிமூதூர்மணிமண்டபத்திடை
நூன்றைதாணிழலிருந்தோய்நின்னை
யரசுவீற்றிருக்குந்திருப்பொறியுண்டென்
றுரைசெய்தவன்மேலுருத்துநோக்கிக்
கொங்கவிழ்நறுந்தார்க்கொடித்தேர்த்தானைச்
செங்குட்டுவன்றன்செல்லனீங்கப்
பகல்செய்வாயிற்படியோர்தம்மு
னகலிடப்பாரமகலநீக்கிச்
சிந்தைசெல்லாச்சேணெடுந்தூரத்
தந்தமிலின்பத்தரசாள்வேந்தென்
றென்றிறமுரைத்தவிமையோரிளங்கொடி
தன்றிறமுரைத்ததகைசானன்மொழி
தெரிவுறக்கேட்டதிருத்தகுநல்லீர்".

30. வரந்தருகாதை. 170 - 185 வரி.

சோமேசுவரன் இளவரசனானாலும் ராஜ்யபாரத்தைப்பெரும்பாலும் விக்கிரமாதித்தனே வகித்துவந்தான்.

தந்தைக்குத்துணையாக விக்ரமாதித்தன்காட்டிய போர்த்திறமை.

எல்லாச்சண்டைகளுக்கும் அவனையே ஆகவமல்லன் அனுப்பினான். பலமுறை சோழனைப் புறங்காட்டச்செய்து தென்கடற்கரைவரையில் வந்து மலயமலையைக் கைக்கொண்டு தன்னிடமடைக்கலம்புகுந்த மாளவ அரசனுக்கு அந்நாட்டை மீட்டு அளித்து, கௌட (வங்காளம்) காமருப (அஸ்ஸாம்) தேசங்களுக்குச்சென்று கிழக்குத்தொடர்ச்சிமலையைக்கடந்து காஞ்சியைத்தாக்கி மலையவனத்தையழித்துக் கேரளவரசனைத்தோற்கச் செய்து சோழநாட்டுராஜதானியாகிய கங்கைகொண்டசோழபுரத்தைக்கைப்பற்றி, வேங்கிக்கும், சக்கரகொட்டத்திற்கும் சென்று கிருஷ்ணாநதிக்கரைக்கு விக்கிரமாதித்தன் திரும்பிவருமளவில் தந்தையாகிய ஆகவமல்லன் இறந்தசெய்தியைக்கேட்டானென்று பில்ஹணகவி (15) வருணித்திருக்கிறார்.

சற்றேறக்குறைய இருபத்தைந்துவருஷங்களடங்கிய மேற்கண்ட [illegible]ற்றின் [illegible]லைசயை நிர்ணயிப்பது கூடாததாகுமென்று டாக்டர் பூலர் கருதியபோதிலும் (16) பின்பு வெளிவந்த சோழசாசனங்களைக் கொண்டு ஒருவாறு நிச்சயிக்கலாம்.

முதன்முறை சோழரைத் தாக்கியது.

முதன்முறை சோழநாடு மலயநாடுகளில் விக்கிரமாதித்தன் பிரவேசித்தது கி. பி. 1047 ஆகும். இது அவ்வருஷத்திய ராஜாதிராஜனுடைய சாசனத்தில் (17) 'திண்டிறல் விருதர் விக்கி' என்பதனால் அறியக்கிடக்கின்றது.

---

"குணவாயிற்கோட்டத்தரசுதுறந்திருந்த
குடக்கோச்சேரலிளங்கோவடிகட்கு"
பதிகம் - 1 - 2 - வரி.

15. விக். சரி. III. & IV.
16. பூலர் பதிப்பு.
விக். சரி. முகவுரை. 31. N. 3.
17. S. I. I. III. 56.

**மாளவ அரசனுக்குச் செய்த உதவி.**

விக்கிரமாதித்தனுடைய உதவியால் ராஜ்யத்தையடைந்ததாகப் பில்ஹணர் கூறியிருக்கும் மாளவ அரசன் யாவன்? எப்போது? எக்காரணத்தைக் கொண்டு அவ்வரசன் விக்கிரமாதித்தனுடைய உதவியைநாடினன். கி. பி. 1055-6 ஆம் வருஷத்திய பிரமாரகுலத்து மாந்தாதா சாசனத்தில் (18) மாளவ தேசத்தரசனாகிய ஜயசிங்கன் போஜதேவனுடையதிருவடிகளைத் தியானித்துக்கொண்டிருப்பதாகச்சொல்லப்பட்டிருப்பதால் தாராநகரத்து, போஜராஜன் கி.பி. 1055-க்கு முன்னமிறந்திருத்தல்வேண்டுமென்பது தெளிவாகிறது. (19) போஜன் புத்திரனின்றிஇறந்ததும் அக்காலத்துப் பிரபலவீரனும் சேதிதேசத்தரசனுமாகிய கர்ணன் கூர்ஜரதேசத்தரசனான பீமதேவனுடன்சேர்ந்து மாளவதேசத்தையெதிர்த்து தாராநகரத்தை இருபுறமுந்தாக்கிவளைக்கவே (20) போஜனது உறவினனாகிய ஜயசிங்கன் தன்னந்தனியனாய் நாட்டைக்காப்பாற்றச் சக்தியற்றவனாகி ஆகவமல்லனைத் தனக்குஉதவிபுரியவேண்டினன். ஆகவமல்லனும் மாளவதேசத்திற்கு விரோதியான சேதி கூர்ஜர அரசர்கள் ஒன்றுசேர்ந்தால் தன் நாட்டின் வடஎல்லைக்கே நாளடைவில் பலக்

---

18. Epi. Ind. IV. 46-48. காலஞ்சென்றவரசர்களின் திருவடியைத் தியானிப்பதாகச்சொல்லிக்கொள்வது பிரமாரகுலத்துஅரசரின்வழக்கம்.

19. டாக்டர் பூலர் விக். சரி. முகவுரை 23-ம் பக்கத்து முதற்குறிப்பில் போஜன் 1063-5 வரையிலும் கூட மாளவத்தை யாண்டிருக்கலாமென்றும் பில்ஹணகவி நேரில் அவனைப்பார்க்கவில்லை யென்றாலும் வேண்டுமானால் பார்த்திருக்கக்கூடுமென்றும் சொல்லியிருக்கிறார். இதற்குப்பூலர்கூறும் ஆதாரம் விக். சரி. XIII. 96-ம் சுலோகம். ஆனால் இச்சுலோகத்தில் பில்ஹணன் போஜனைப் பார்க்கப்போனபோது தாராநகரே அழுதுகொண்டிருந்ததென்று சொல்லப்பட்டிருப்பதால் போஜன் இறந்துவிட்டானென்பதே பொருளன்றி டாக்டர் பூலர் கொள்ளுமாறு அவன் ஒரு பாசறைக்குச்சென்றிருந்தானென்று பொருள் கொள்ள இடமில்லை. அன்றியும் போஜனைப்போன்ற கவிகளை யாதரிப்பவன் (கவிபார்த்தவன்) வட இந்தியாவில் அப்போது இருந்திருந்தால் பில்ஹணகவி தக்ஷிணத்திற்கு வர நேர்ந்திராது. மேலும் கி. பி. 1055—6க் கப்பால் போஜன் மாளவத்தை யாண்டிருக்க முடியாதென்று மேற்சொன்ன மாந்தாதாசாசனத்தால் நிச்சயமாக விளங்குகிறது.

20. உதயபூர் பிரசஸ்தி Epi. Ind. I. மேருதுங்கன் பிரபந்த சிந்தாமணி,

குறைவாகுமென்றெண்ணிச் சேதிநாட்டைத்தாக்க, கர்ணன் மாளவத்தினின்றும் பின்னிடைந்தான். இதோடுநில்லாமல் ஆகவமல்லன் தன் மகனான விக்கிரமாதித்தனையும் மாளவத்திற்கனுப்ப அவனும் அதுவரையில் கர்ணனுக்கு எதிராக ஜயசிங்கன்பக்கலிலிருந்து போர்புரிந்துவந்த உதயாதித்யனோடு (21) சேர்ந்து ஜயசிங்கனை மாளவத்தில் நிலைநிறுத்தினான். ஜெயசிங்கன்இறந்தபின் உதயாதித்யன் மாளவத்தையாண்டான்.

கௌடகாமருபங்களுக்குச் சென்றது.

விக்கிரமாதித்தன் இவ்வாறு மாளவத்திலிருந்து திரும்புகையில் கௌடகாமருபதேசங்களுக்கும் சென்றிருக்கலாம்.

இரண்டாமுறை சோழரைத் தாக்கியது.

கி. பி. 1053-4 இல் சோழருக்கும் சளுக்கியருக்கும் கொப்பத்தில் நடந்த கடுஞ்சண்டையில் ராஜாதிராஜன் கொலையுண்டு அவன் தம்பியாகிய ராஜேந்திரதேவன் 'போர்க்களத்திலேயே முடிகவித்தானென்று' முன்னமே (22) சொல்லியிருக்கிறோம். பிறகு கி. பி. 1062 வரையில் ராஜேந்திரதேவன் அரசாண்டுவந்தான்.

(தொடரும்.)

அ. வா. வெங்கடராமய்யர்,

இராஜாங்க கலாசாலை, கும்பகோணம்.

---

21. Epi. Ind. II. 192. நாகப்பூர் சாசனம்.
303. காசி சாசனம்.

22. முதற்பாகம்.

# பல்லவசரித்திரம்.

(G Jouvean Dubrenil அவர்களது The Pallvas என்ற அரிய நூலிலிருந்து அவர்களது அநுவாதத்துடன் மொழிபெயர்க்கப்பெற்றது.)

## அத்தியாயம் 1.

பல்லவர்களின் ஆதிசரித்திரத்தை அறிவதற்குப் பெரிதும் உபகாரமான ஒரு லிகிதம் கிருஷ்ணாநதியின் தென்கரையோடு பரவியிருக்கிற குண்டூர் ஜில்லாவில் 'நரஸராவ்' பேட்டைக்கு 12-மைலுக்கப்பாலுள்ள 'மயிதவோலு' கிராமத்தில் கிடைத்திருக்கின்றது. அதற்குச் சரித்திரகாரர் விரிபரசாஸனம் எனப்பெயர்வழங்குகின்றனர். பல்லவவமிசத்தையும் பாரத்வாஜ கோத்திரத்தையும் சேர்ந்தவனான சிவஸ்கந்தவர்மன் என்னும் யுவமகாராஜன், தன் தந்தை அரசாட்சியின் பத்தாவது வருஷத்தில் (தந்தையின் பெயர் இன்னதென்று தெரியவில்லை) தன் ராஜதானியாகிய காஞ்சீபுரத்திலிருந்து ஆந்திராபத மாகாணத்திலுள்ள விரிபாகிராமத்தைப்பற்றி தஞ்ஞகட "கவர்னர்" களுக்கு ஒரு உத்தரவு அனுப்பினான். (Ep. Ind. Vol. VI. Page 84.)

இந்த ராஜகுமாரன் பல்லவவமிசத்தைச்சேர்ந்தவன் என்பது திண்ணம். ஏனென்றால் சிவஸ்கந்தவர்மன் காஞ்சியில் வசித்தானென்றும் அவன் பல்லவவமிசத்தையும் பாரத்வாஜகோத்திரத்தையும் சேர்ந்தவன் என்றும் அந்தச் சாஸனத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தச்சாஸனங்கள் குண்டூர் ஜில்லாவில் கண்டெடுக்கப்பட்டதனாலும் அது எந்தக்கிராமத்துக்காகக் கொத்தப்பட்டதோ அந்தக்கிராமமும் ஆந்திராபதத்தில் இருந்ததனாலும் உத்தரவு அமராவதி பட்டணமாகிய தஞ்ஞகட "கவர்னர்" களுக்கு அனுப்பப்பட்டதனாலும் இக்காலத்திய பல்லவராஜாக்கள் காஞ்சிமாகாணமாகியதொண்டைமண்டலத்தில்மட்டுமன்றி கிருஷ்ணாநதிக்கரைவரையிலுள்ள நாட்டிலும் அரசுசெலுத்தி

னூர்கள் என்று உறுதியாகக் கூறலாம். கிருஷ்ணாநதிக்கரையிலுள்ள இந்தநாட்டில் ஆந்திரர்கள் வசித்து வந்திருந்தனர். அமராவதிப்பட்டணமும் அந்த நாட்டிலேயே இருந்தது. இரண்டாவதுநூற்றாண்டின் மத்தியில் இரண்டாவது புளுமாயி என்னும் அரசன் வெண்சலவை ஸ்தூபத்தை அங்கே கட்டினான். அது இப்பொழுது சென்னைப் பொருட்காட்சிச்சாலையில் வைக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறாகப் பல்லவர்கள் ஆந்திரர்களுக்கப்பால் கிருஷ்ணாநதிக் கரையிலுள்ள நாடுகளை ஆண்டிருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு எவ்வளவுகாலத்துக்கப்பால்? எந்தச் சமயத்தில்? என்பனவே அறிய வேண்டியவைகளாக இருக்கின்றன.

இரண்டாவது புளுமாயி, மேலேசொன்ன பெயர்பெற்ற ஸ்தூபத்தைக்கட்டிய சிறிது காலத்துக்குப்பின்னரே சிவஸ்கந்தவர்மனுடைய தந்தை அநேகமாய் அமராவதிப்பட்டணத்தை ஆண்டிருக்கவேண்டுமென்று நாம் இப்பொழுது காட்டுவோம்.

விரிபரகிராமத்தின் தானப்பிரமாணத்தில் ராஜாவின் அரசாட்சி வருஷத்தின் தேதியே பொறிக்கப்பட்டிருக்கிறது. எனினும் ஒப்பிட்டு நோக்க வேறு ஏதேனும் விஷயங்கள் இருந்தால், அது பொறிக்கப்பட்டிருக்கும் அக்ஷரங்களின் உதவியினால் தேதியை ஒருவாறு குறிப்பிடலாம். இதற்கநுகூலமாய் ஒப்பிட்டு நோக்கத்தக்க சில பிரமாணங்கள் இருக்கின்றன. குண்டூர்ஜில்லாவில் தென்னாலித்தாலூகாவிலுள்ள கோண்டிமுதிக்கிராமத்தில் கிடைத்த சாஸனங்களில் பொறிக்கப்பெற்ற எழுத்துக்களாலேயே மயிதவோலு சாஸனங்களும் பொறிக்கப்பெற்றிருக்கின்றன. பாஷைநடையிலும் பதஅமைதியிலும் கொண்டமுதிப்பிரமாணமானது கோதமீபுத்ரசாதகர்ணியின் "கார்லே" லிகிதத்தையும் வாசிஷ்டிபுத்ர புளுமாயியின் "நாஸிக" லிகிதத்தையும் மிக ஒத்திருப்பதனால் அவைகளில் அதிக வித்தியாசமிருக்க இடமில்லை.

"மயிதவோலு" சாசனங்களைவெளியிட்ட சிவஸ்கந்தவர்மன் என்னும் பல்லவஅரசன்காலத்திலேயே அவனும் ஜீவித்திருந்திருக்க வேண்டுமென்று இந்த லிகித அக்ஷரங்களால் ஊகிக்கலாம்.

அன்றியும் அந்த லிகிதத்தின் பாஷைநடையும் பத அமைதியும் கோதமீபுத்ரசாதகர்ணியினுடையவும் (Nos. 4 & 5) வாசிஷ்டிபுத்ர

புளுமாயியினுடையவும் லிகிதங்களையும் (No. 3) மிக ஒத்திருப்பதனால் ஜயவர்மனுடையகாலம் அவ்விரண்டு ஆந்திர அரசர்களின்காலங்களுக்கும் மிக எட்ட இருக்கமுடியாது. (Bom. Gaz. Vol. XVI. Ep. Ind. Vol. VI. No. 31. P. 315) அன்றியும் ஜயவர்மன் சாஸனங்களுக்கும் 19-ஆவதுநம்பர் கார்லே லிகிதத்துக்கும் (A. S. W. I. Vol. IV. P. 112.) உள்ள மிக நெருங்கிய ஒற்றுமையும் இதை வற்புறுத்துகின்றது. அமராவதிப்பட்டணத்திலுள்ள ஸ்தூபத்தைக்கட்டியது வாசிஷ்டபுத்ரபுளுமாயியே என்று நாம் கொள்வோமானல் மயிதவோலுசாஸனங்களைக்கொத்துவித்த சிவஸ்கந்தவர்மன்தந்தையாகிய பல்லவ அரசன் புளுமாயி இரண்டாவானுக்குச் சிறிதுகாலத்துக்கப்பால் அமராவதியில் அரசாட்சிசெய்தான் என்று நாம் துணியலாம்.

இந்தப்புளுமாயியின் மகன் கி. பி. 177 முதல் 184 வரை சிவஸ்கந்தவர்மன் என்ற பெயருடன் அரசாண்டிருந்தான். பல்லவ அரசன் மகனுக்கும் அதுவே பெயராக இருக்கின்றது. இவ்விருவர்பெயரும் ஒற்றுமையாயிருப்பது ஈண்டு நோக்கத்தக்கது.

இவ்வொற்றுமைக்குக்காரணம் என்னவெனில் பல்லவ அரசன் சிவஸ்கந்தசாதகர்ணியின்மகளை விவாகம் செய்திருக்கவும், பல்லவ இளவரசன் இந்துக்களின் வழக்கப்படி தன் பாட்டனாகிய ஆந்திர அரசன் பெயரைப்பெற்றிருக்கவும் கூடும்.

ஸகங்களைப்பற்றிமட்டுமே நாம் இப்பொழுது சிந்தனைசெய்கின்றோமாகையால் பல்லவர்களின் பாரஸீக உற்பத்தியைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்லுவோம்.

இரண்டாவதுபுளுமாயியின்தந்தை பஹ்லவர்களோடுபொருதான். இந்தப்புளுமாயியே ருத்ரதாமன் என்ற க்ஷத்ரபனோடு சண்டைசெய்து கஷ்டப்பட்டவன். ருத்ரதாமன் கி. பி. 150-க்கிடையே ஸுவிசாகன் என்ற ஒரு பஹ்லவனை மந்திரியாக வைத்திருந்தான். (Ind. Ant. VII. 257. Junagadh Inse.) பெயர்களின் ஒற்றுமையைநம்பி ஆந்திரர்களோடு போர்புரிந்த இந்தப் பஹ்லவர்களே கிருஷ்ணநதிக்கும் பாலாற்றுக்கும் இடையில் ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தி, பல்லவவம்சத்தை ஸ்தாபித்தார்கள் என்று சில ஆசிரியர்கள் எண்ணுகிறார்கள்.

நுட்பமாய் ஆராய்ந்துபார்த்தால் இவ்விதி பல மாறுபாடுகளுக்கு இடந்தருகின்றது. திருஷ்டாந்தமாக, சிவஸ்கந்தவர்மன்தங்கைக்கும் அதே பெயருடைய ஆந்திர அரசன்மகனுக்கும் நடந்ததாக எண்ணப்படும் விவாகத்தைப்போன்ற விவாகசம்பந்தத்தாலேயே ஆந்திர ராஜ்யத்தின் ஒருபாகத்தைப்பெற்றார்களேயன்றி, ஜெயத்தினால் பெற வில்லையென்று நாம் எண்ணலாம். ஆந்திரர்களுக்கும் மற்றவமிசத் தவர்களுக்கும் இதுபோன்ற விவாகங்கள் நடைபெற்றிருக்கின்றன. இரண்டாவதுபுளுமாயி ஒரு பஹ்லவனை மந்திரியாக வைத்திருந்த ருத்ரதாமன் மகளை மணந்தானென்று நமக்குத்தெரியுமே. இந்த ஊகங்களெல்லாம் யுவமகாராஜ சிவஸ்கந்தவர்மன், சிவஸ்கந்த சாதகர்ணி என்ற பெயர்களுக்கும், பஹ்லவர் பல்லவர் என்ற பெயர்களுக்கும் உள்ள ஒற்றுமைகளையே ஆதாரமாகப்பெற்றிருக்கின்றன. ஆகையால் இவை விவாதங்களுக்கு இடந்தருகின்றன.

நமக்கு நிச்சயமென்று எண்ணக்கூடியதெல்லாம் மயிதவோலு சாஸனங்கள் செதுக்கப்பட்டபொழுது அமராவதியில் அரசுபுரிந்த பல்லவ அரசன் அமராவதியில் ஸ்தூபங்கட்டின இரண்டாவது புளுமாயிக்குச்சிறிதுகாலத்துக்குப்பின் வாழ்ந்திருந்தான் என்பதே. ஆனால் எவ்வளவுகாலத்துக்குப்பின் என்று திட்டமாகச்சொல்லவும் முடியாது. ஆந்திரவமிசம் கி. பி. 236-க்கு அணித்தாக முடிவுபெற்றது. பல்லவர்கள் ஆந்திரர்களுக்குப்பின் அமராவதியில் இதற்கு மிக முன்னரே அரசாளவில்லையென்றும் அக்காலத்தில் மிகவும் குறுகின ராஜ்யத்தை உடைத்தாயிருந்த ஆந்திரக் கடைஅரசர்களின் ஸமகாலத்தவனாக சிவஸ்கந்தவர்மன் இருக்கவில்லையென்றும் காட்ட ஆதாரமொன்று மில்லை. அப்படியானால் மயிதவோலுசாஸனங்கள் கி. பி. 200-க்கு அணித்தாகச்செதுக்கப்பெற்றிருக்கலாம். கி. பி. 236-க்கு அப்பால் பல்லவர்கள் ஆந்திரராஜ்யத்தை ஆண்டார்கள் என்றுகொள்வோமானால் அவ்வாறு அரசாண்டது கி. பி. 236-க்கு ஸமீபமாகத்தான் இருந்திருக்கவேண்டும். என்னென்றால் மயிதவோலுசாஸனங்களுக்கும் கோண்டமுதியில் கண்டெடுக்கப்பெற்ற ஜெயவர்மன் சாஸனங்களுக்கும் உள்ள ஒற்றுமை மிக நெருக்கமாக இருப்பதனால் சிவஸ்கந்தவர்மனுக்கும் இரண்டாவதுபுளுமாயிக்கும் இடையே உள்ள காலம் ஒரு நூற்றாண்டுக்குமேல் இருந்திராது. ஆகையால் பல்லவ அரசர்கள்

கி. பி. மூன்றாவது நூற்றாண்டின் முற்பகுதியில் அதாவது ஸ்தூபம் கட்டப்பட்டதற்கு 50 வருஷங்களுக்குப்பின் அமராவதியில் அரசாண்டிருந்தார்கள் என்று நாம் துணியலாம். இவ்வரசர்கள் மிக விரிவான ராஜ்யத்தை ஆண்டிருந்தார்கள். அவர்களது ராஜ்யம் பாலாற்றங்கரை முதல் கிருஷ்ணாநதிக்கரைவரை பரவியிருந்தது. ஆகையால் அவர்கள் மிகச் சக்தியுடையவர்களாகவும் பெயர்பெற்றவர்களாகவுமிருந்தார்கள்.

---

## அத்தியாயம் II.

### வாயனூர்ச்சாஸனம்.

---

மயிதவோலுவில் கண்டெடுக்கப்பட்ட சாஸனம் பிராகிருதபாஷையில் எழுதப்பெற்றிருக்கிறது. அதைப்போன்ற வேறிரண்டு சாஸனங்களும் இருக்கின்றன. ஆனால் மற்றப் பல்லவசாஸனங்கள் எல்லாம் ஸம்ஸ்கிருதபாஷையில் எழுதப்பெற்றவை. முற்கூறப்பட்டவையே மிகப்புராதனமானவையென்றும் மூன்றாவதுநூற்றாண்டில் பொறிக்கப்பெற்றவை யென்றும் கொள்ளலாம். இவ்விரண்டுசாஸனங்களில் ஒன்றான ஹீரஹடகல்லி சாஸனம் (Ep. Ind. Vol. I. P. 2.) பல்லவ வமிசத்தவனும் பாரத்வாஜ கோத்திரத்தவனுமான காஞ்சி அரசன் சிவஸ்கந்தவர்மனது 8-ஆவது ஆண்டில் தோன்றியது. தன் தந்தையாகிய பப்பதேவன் செய்த தானத்தை சிவஸ்கந்தவர்மன் இந்தச்சாஸனத்தினால் உறுதிப்படுத்துகிறான். மயிதவோலு தானம் நிகழ்ந்தகாலத்து யுவமகாராஜனாக இருந்தவனே இந்தச் சிவஸ்கந்தவர்மன் என்று நாம் ஊகிக்கலாம்.

இந்தச் சாஸனம் பல்லவராஜ்யத்தின் விரிவை மிகத்தெளிவாகக் காட்டுகின்றதனால் மிக முக்கியமானதே. பெல்லாரி ஜில்லாவில் கண்டெடுக்கப்பெற்ற இந்தச் சாஸனங்கள் ஸாதாஹனிரட்டம் (அதாவது மாகாணம்) பல்லவராஜ்யத்தின் ஒருபாகமென்று கூறுகின்றன. பெல்லாரி ஜில்லாவின் ஒருபாகம் இதிலடங்கியுள்ளது. ஆகையால் காஞ்சீபுரத்தை ராஜதானியாகவுடைய பல்லவராஜ்யம் சோழமண்டலக்கரையில் கிருஷ்ணாநதியின் ஸங்கமம்வரை மட்டுமன்றி தெக்கணத்தின் மேற்குப்பாகத்தில் துங்கபத்திரைநதிக்கரைவரையிலுங்கூடப் பரவியிருந்தது என்று நாம் அறிகின்றோம்.

இவ்விடத்தும் பல்லவர்கள் ஆந்திரர்களுக்குப் பிறகே வந்தார்கள். பெல்லாரிஜில்லாவில் கண்டெடுக்கப்பெற்ற மியாகதோனி சாஸனம் (G. O. No. 99 29th August 1916. Report on Epigraphy for 1915—16.) இரண்டாவது புளுமாயி கி. பி. 140-க்கு ஸமீபத்தில் ஸாதாவஹனிஹாரம் என்ற மாகாணத்தை ஆண்டிருந்தானென்று கூறுகின்றது. இந்த மாகாணம் ஹீரஹடகல்லி தாமிர சாஸனங்களில் கூறப்படும் ஸாதாஹனிரட்டமேயன்றி வேறன்று.

ஆகையால் ஆதியில் பல்லவராஜ்யம் தமிழ்நாட்டைவிடத் தெக்கணத்திலேயே அதிகமாகப்பரவியிருந்தது. காவேரிநதிக்கரைகளும் அதில் உட்பட்டிருந்தன என்பதற்கு ஆதாரம் ஒன்றுமேயில்லை. திரிச்சிராப்பள்ளியை அடுத்த நாடுகள் ஒருக்கால் சோழர்களால் ஆளப்பட்டிருக்கலாம். ஆனால் பெல்லாரிமுதல் பெஜவாடாவரை (அதாவது ஆந்திரராஜ்யத்தின் ஒரு முக்கியபாகத்தை) யுள்ள தேசங்களைப் பல்லவர்கள் ஆண்டார்கள் என்று நமக்குத்திட்டமாய்த்தெரியும். இக்காரணங்களால் பல்லவர்கள் வடதேசத்தவர்கள் என்றும் ஆந்திரவமிசத்து ராஜகுமாரிகளை மணந்து ஆந்திரராஜ்யத்தின் தென்பாகத்தில் ஒருபகுதியை அடைந்தார்கள் என்றும் ஊகிக்க இடமுண்டு.

மற்றச் சாஸனம் குண்டூர்ஜில்லாவில் கண்டெடுக்கப்பெற்றது. (Ep. Ind. Vol. VIII. P. 143.) விஜயஸ்கந்தவர்மனது அரசாட்சிக் காலத்தில் பாரத்வாஜகோத்ரத்தவனான விஜயபுத்தவர்மன் என்ற ஒரு பல்லவ யுவமகாராஜன் மனைவியும், புத்தியாங்குரன் தாயுமாகிய சாருதேவியானவள் தாலூரத்திலுள்ள நாராயணசுவாமி ஆலயத்துக்கு ஒரு தானம் செய்தாள்.

இந்தச் சாஸனங்களின் எழுத்துக்கள் ஹீரஹடகல்லி சாஸனங்களின் எழுத்துக்களை ஒத்திருக்கின்றன.

எனினும் அரசன்பெயர் ஒவ்வாதிருப்பதனால் விஜயஸ்கந்தனும் சிவஸ்கந்தனும் ஒருவனேயென்று திட்டமாய்ச்சொல்லமுடியாது.

குண்டூர் பெல்லாரி ஜில்லாக்களில் கண்டெடுக்கப்பெற்ற மூன்று பிராகிருத சாஸனங்களும் (மயிதவோலு சாஸனம், ஹீரஹடகல்லி சாஸனம், சாருதேவியின் தானசாஸனம்) காஞ்சீபுரத்தவர்களான பல்

லவவமிசத்தைச் சேர்ந்த அநேக அரசர்கள் - அதாவது (1) சிவஸ்கந்தவர்மன் யுவமகாராஜாவின் தந்தை (இவனே ஹீரஹடகல்லி சாஸனங்களில் பப்பதேவன் என்று அழைக்கப்படுகிறவன்). (2) யுவமகாராஜன் சிவஸ்கந்தவர்மன் (3) மகாராஜன் சிவஸ்கந்தவர்மன் (4) மகாராஜன் விஜயஸ்கந்தவர்மன் (5) யுவமகாராஜன் விஜயபுத்தவர்மன் (6) அவன் மகன் புத்தியாங்குரன் (இரண்டாம்மூன்றும்பெயர்க்காரர் ஒருக்கால் ஒருவராக இருக்கலாம்) முதலியோர் மூன்றுவது நூற்றுண்டிடையில் தொண்டைமண்டலத்தை மாத்திரமன்றி கிருஷ்ணு துங்கபத்திரை நதிக்கரைகளையடுத்த நாடுகளையும் (அதாவது தெலுங்கநாட்டின் மிகுதிப்பாகத்தையும்) ஆண்டார்கள் என்று காட்டுகின்றன.

அலகாபாத் ஸ்தூபியில் பொறிக்கப்பெற்ற விஷயத்தினுல் ஸமுத்ரகுப்தன் என்ற பெயர்பெற்ற சக்கரவர்த்தி காஞ்சியரசனுகிய விஷ்ணுகோபனை கி. பி. 340-க்கு ஸமீபகாலத்தில் ஜெயித்தானென்று தெரிகிறது. விஷ்ணுகோபன் பல்லவன் என்றும், ஸமுத்ரகுப்தன் தமிழ்நாட்டிலுள்ள காஞ்சிவரையிலும் வந்தானென்றும் சில ஆசிரியர்கள் கூறுகின்றுர்கள்.

இறுதியில் கூறப்பட்ட முடிவு சரியல்லவென்று நான் எண்ணுகிறேன். ஸமுத்ரகுப்தன் ஒரு பொழுதும் தமிழ்நாட்டில் பிரவேசிக்கவில்லை யென்றும், ஆனுல் விஷ்ணுகோபன் பல்லவனே யென்றும் நான் நம்புகிறேன். காஞ்சியரசர்கள் கிருஷ்ணுநதிக்கரையிலுள்ள நாடுகளையும் ஆண்டார்கள் என்று நமக்குத்தெரியும். ஆகையால் நான் அடியில் கூறுகிறபடி நேர்ந்திருக்கவும் கூடும். அதாவது ஸமுத்ரகுப்தன் வட இந்தியாவிலிருந்து வந்து பிடாபுரத்திலும் மகேந்திரகிரியிலும் கோட்டூரிலும் அரசாண்ட அரசர்களைத் தோற்கடித்ததனுல் அவன் கோதாவரிக்குத் தெற்கிலும் செல்லத்தொடங்குவதைக் கண்டவுடன் கொல்லேரு ஏரியண்டை ஆண்டிருந்த மண்டராஜனும் அவன் அயலானுன வெங்கியரசனும் கிருஷ்ணுநதியின் தென்கரையை ஆண்ட காஞ்சியரசனுன விஷ்ணுகோபனும் அவனது அயலானுன பாலக்கராஜன் உக்கிரஸேநனும் ஒன்று சேர்ந்து தடுக்க முயன்றிருக்கலாம். ஆனுல் அவனே வெற்றியடைந்ததாக அவன் கூறுகின்றுன். அவன்மொழிக்கு எதிரிடையான தெளிவுகள் ஏற்படும்வரை நாம் அவன் வார்த்தையை நம்பவேண்டியவர்களே.

அது எப்படியானாலும் ஆகட்டும். முன்னேறிச்செல்வதற்குக் கஷ்டமான தென்னாட்டில் ஸமுத்ரகுப்தன் பிரவேசிக்கத்துணியாது வடதேசத்துக்குத் திரும்பிச் சென்றிருக்கலாம்.

நாம் இப்பொழுது ஸம்ஸ்கிருதசாஸனங்களைப் பரிசோதனை செய்வோம்.

## 5. தாம்பிரசாஸனங்கள்.

1. ஓம்கோடு No. 1. (G. O. No. 99 29th August 1916 Part II. No. 3.)

2. உருவுபள்ளி (Ind. Anti. Vol. V. Page 50.)

3. ஓம்கோடு No. 2. (G. O. No. 99 29th August 1916 Part II. No. 4.

4. பிகிரி (Ep. Ind. Vol. VIII. P. 159.)

5. மாங்களூர் (Ind. Anti. Vol. II. P. 154.)

இந்தச் சாஸனங்களிலிருந்து கீழ்வரும் வம்சாவளி பெறப்படுகின்றது.

குமாரவிஷ்ணு
|
ஸ்கந்தவர்மன் I
|
வீரவர்மன்
|
ஸ்கந்தவர்மன் II
|
யுவமகாராஜன் விஷ்ணுகோபன்
|
ஸிம்ஹவர்மன்

இந்த ஆறு அரசர்களும் பல்லவ வமிசத்தையும் பாரத்வாஜ கோத்திரத்தையும் சேர்ந்தவர்கள். அவர்களது ராஜதானி காஞ்சிபுரம் என்று ஸ்தாபிக்கப்பிரமாணம் ஒன்றுமேயில்லை.

(தொடரும்.)

பண்டிதர் S. முத்துசுவாமிப்பிள்ளை,
செண்ட் ஜோஸப் ஹைஸ்கூல், திருவனந்தபுரம்.

# இந்துதேசசரித்திரகாலக்குறிப்புகள்.
## (Chronological Notes of Indian History.)

"செந்தமிழ்" தொகுதி கசு - பகுதி அ - ன், சஉ௦-ஆம்பக்கத்தொடர்ச்சி.

---

1452. லுங்கர் மதம் ஸ்தாபனமாயிற்று. இது க்ஷமணமதத்தின் ஓர் பிரிவு.

1458. (சகம் 1380) ஜயவீரசிங்கமஹாராஜனுக்கும், கண்டி மன்னனை புவனேகபாஹுவுக்கும் முத்துச்சலாபம் விஷயமாய் நடந்த யுத்தத்தில் கண்டிராஜன் தோல்வியடைந்தான்.

1463-1506. ஜடில அழகன் பராக்ரமபாண்டியன்.

1469-1529. மாகியவல்லி. இதாலிதேசத்து ராஜநீதிசாஸ்திரி.

1469-1538. நாநக். சீக் மதஸ்தாபகன். கபீர்தாஸருடைய சிஷ்யர். 1469 சித்திரைமீ லாகூர்ஜில்லா தலவண்டிகிராமத்தில் பிறந்தார்.

1473. ஸ்தானகவாஸிகள் என்ற ஓர் க்ஷமணமதப்பிரிவு ஸ்தாபனமாயிற்று. விக்ரஹ ஆராதனை கூடாது என்பது இவர்கள் கொள்கை.

1. திகம்பரர், }
2. ச்வேதம்பரர், } க்ஷமணமதப்பிரிவுகள்.
3. ஸ்தானகவாஸிகள், }

1474. தக்ஷிணத்தில் பஞ்சம்.

[Ferishta.]

1478-1504. புருஷோத்தமதேவன். ஒரிஸாவில் ஆண்ட கங்கவம்சத்தரசன். கஞ்சிமன்னன் தன் புதல்வியை இவனுக்கு விவாகம் செய்விக்கமாட்டேனென்றான். புருஷோத்தமன் படையெடுத்துச்சென்று கஞ்சிராஜனைவென்று அவன் மகளைச்சிறைகொண்டுவந்து மணம்புரிந்தான்.

1479-1499. பராக்ரமகுலசேகரன்.

1479. வல்லபாசாரியார் ஜனனம். மத்யமாஹாணம் - ராஜபூர் (Raipur) ஜில்லா, சம்பகாரண்யத்துக்கடுத்த ராஜம் என்ற ஊரில் ஓர் அந்தணர்குலத்தில் பிறந்தார்.

[Pariksh's convention of Religions in India. Vol. II.]

52 - வது வயதில் இறந்தார்.

இவர் பக்திமார்க்கத்தையும் பாகவத ஸம்ப்ரதாயத்தையும் ஸ்தாபனஞ்செய்தார்.

இவர் கொள்கை—

"ஸ்வதர்மாசரணம்பக்த்யா
விதர்மாச்சநிவர்த்தனம்,
இந்த்ரியார்த்தான் விநிக்ராஹ்ய
ஸர்வபக்த்யா ய்ஜேத்அயம்."

-[நிபந்த. II. 238.

=ஸ்வதர்மத்தைக்கூடியவரையநுஷ்டிப்பதும், அதர்மத்தைச்செய்யாது தவிர்ப்பதும், பஞ்சேந்திரியங்களையும் தன்வசப்படுத்துவதும், —பூர்ணபக்தியுடன் ஈசனை உபாஸிப்பதும்வேண்டும் என்பதே.

ப்ரவிருத்தி, நிவிருத்தி இருந்தால் போதாது. இந்திரியநிக்ரஹம், ஆத்மபரித்யாகம் [Self-Surrender or ப்ரபத்தி]—இவைகளுடன் கூடிய பக்திதான் முக்யம்.

1484. இமத்ஷா வம்சஸ்தாபகரான படேல்லா, இமத்ஷா, பாமினீஎன்பவர் பீரார் ராஜ்யத்தைஸ்தாபனம்செய்தார்.

1485. சைதந்யர் ஜனனம்.

இவர் பிதா—ஜகந்நாதமிச்ரர்.

இவர் மனைவி—(நீலாம்பரர் புதல்வி) ஸசி.

பிறப்பிடம்—நவத்வீபத்திலுள்ள நிமி அல்லது விசுவம்பரம் என்ற ஊர். சைதந்யர், வங்காளத்தில் வைஷ்ணவமதத்தை ஸ்தாபித்து ப்ரபலப்படுத்தினர்.

இவர் காலத்தவர்—

ஜயதேவர் (ப்ரஸந்நராகவம் இயற்றியவர்.)

1489. பீஜபூர் ராஜ்யம், அதில்ஷா என்பவரால் ஸ்தாபனமாயிற்று. 1688-ல் இது தில்லிராஜ்யத்துடன் சேர்ந்துவிட்டது.

1490. அஹமத்நகர்ராஜ்யம் அஹமத்ஷா என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது. 1626-ல் இது தில்லிராஜ்யத்துடன் சேர்ந்துவிட்டது.

1492. பீடார் (அஹமதாபாத்) ராஜ்யம். பரீத்ஷாவம்சத்தலைவனை காஸிம் பரீத் (I) என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது.

1493. ரெஜீப் (898ஹு ஏப்பிரல்மீ௴ சனிக்கிழமை) ஹேமராஜன் (நரசநாயகன்=விஜயநகரசேனாதிபதி) அதில்ஷாவைத்தோற்கடித்தான். ஆயினும் அதில்ஷா கல்கமும் கொள்ளையும் அடித்துக்கொண்டிருந்து சிலநாளைக்குப்பின் ஹேமராஜனைத்தோற்கடித்தான்.

[Ferishta.]

1498. வாஸ்கோடிகாமா என்ற போர்த்துகல்யாத்ரி முதல் முதல் கள்ளிக்கோட்டைத் துறைமுகத்தில்வந்து இறங்கினர். இந்தியாவுக்கு வந்த ஐரோப்பியரில் இவர்தான் முதல்வன்.

1503. (விக்ரம. 1559) ராதாவல்லப மதம் என்ற வைஷ்ணவ மதம் ஹரிவம்சர் என்ற கௌடப்பிராமணரால் ஸ்தாபனமாயிற்று.

இவர் பிறப்பிடம்— வடக்கே கிருஷ்ணமதுரைக்கு அடுத்த தேவவனம் எனும் கிராமம்.

1503. (சகம் 1425) நரசிம்மநாயக்கர் என்ற சேனுபதியின் மரணம். அவர்மகன் வீரநரசிம்மன் பட்டத்துக்கு வந்து 1508-ம்வரை ஆண்டான்.

1504-1532. ப்ரதாபருத்ரதேவர். ஒரிஸாவில் ஆண்ட கங்கவம்சத் தரசன். சைதந்யர் ஷை தலைநகராகிய ஜகந்நாதம் சென்று ப்ரதாபருத்ரனை வைஷ்ணவமதத்தில் சேர்த்தார். ப்ரதாபருத்ரன் ஜயபுரத்தில் வராஹர் ஆலயம் நிர்மாணம் செய்தார்.

1508 - 9. (மாகசுக்ல சதுர்த்தசி) கிருஷ்ணதேவர் பட்டாபிஷேகம்.

இவர் காலத்தவர்—

தாதாசார்யலு. இவ்வரசாட்சியில் மிகச்செல்வாக்கும் பெருமையும் அடைந்தார். வட ஆர்க்காடுஜில்லா விரிஞ்ஜிபுரத்தில் பிறந்த அப்பயதீக்ஷிதருக்கும் இவருக்கும் விசேஷ ஸம்வாதம் நேர்ந்தது.

[1906 I. R. 886.]

1508. மண்டலபுருஷர். க்ஷமணசந்யாசி. விஜயநகரம்கிருஷ்ண தேவராயர்காலத்தவர். சூடாமணிநிகண்டு என்பதை இயற்றியவர்.

—[ஷை அத். 9. செய்யுள் 10.]

1510. அல்பூகர்க் என்பவர் கோவா என்னும் (போர்த்துகேசத்) தலைநகரை ஸ்தாபித்தார்.

1512. கோல்கோண்டா ராஜ்யம். குதுப்ஷா என்பவரால் ஸ்தாபனம் ஆயிற்று. 1688-ல் தில்லிராஜ்யத்துடன் சேர்ந்துவிட்டது.

1518. (விக்கிரம 1575) மாகமீ சுக்லபக்ஷ ஏகாதசி. கபீர்தாஸ் மரணம். கோரக்பூருக்கு அடுத்த மாகர் என்ற இடத்தில்.

1524. வீரகவிராயர். நல்லூர்வாஸி. (1212 செய்யுள் அடங்கிய) ஹரிச்சந்திரபுராணம் இயற்றியவர்.

1524. லக்ஷ்மணபட்டர் புதல்வரான ராமசந்திரகவி, 'ரஸிகரஞ்ஜனம்' என்ற ஸம்ஸ்கிருதகாவியமும், ரோமாவளி சதகமும் இயற்றினர்.

1526. (சகம் 1448=தாருண ஹூ) ஜேஷ்டமீ சுக்லபக்ஷ ஷஷ்டி கிருஷ்ணதேவராயர் மரணம்.

—[தெலுங்குச்செய்யுள்.]

1526. பாணிப்பேட் யுத்தம். பேபர் என்ற முகல் சக்ரவர்த்தி இப்ராஹீம் லோடி என்பவரை ஜயித்தார்.

1528-1599. ஏகநாதர். மஹாராஷ்ட்ர பாகவதர்.

1530. கிருஷ்ணதேவர் மரணம். (ஏப்ரல்மீ 23உ)

[Sewall's Forgotten Empire.]

1530. (சகம் 1452) அச்சுததேவர் பட்டாபிஷேகம். 1542 வரை ஆண்டார்.

1532-1623. துளஸீதாஸ். ஹிந்திபாஷையில் ராமாயணம் இயற்றியவர். குருபரம்பரையில் ராமானந்தர்முதல் துளஸீதாஸ் 7-ஆமவர். ராமாநுஜரிலிருந்து ராமானந்தர் 5-ஆமவர்.

1533. சிலேலிபி. இதில் வரையப்பட்டிருக்கும் சுலோகம் ஒன்று மல்லிநாதருடையது.

அதாவது:—

"அந்தராயதிமிரோபசாந்தயே
சாந்தபாவனமசிந்த்யவைபவம்,
தம்நரம்வபுஷிகுஞ்சரம்முகே
மன்மஹேஹிமபிதுந்திலம்மஹ:".

1533. (விக்ரம. 1589.) விதக்தமாதவம். 7 அங்கநாடகம் ஸம்ஸ்கிருதம். சைதன்யர் சிஷ்யரான ரூபர் இயற்றினர்.

1534-1543. ஸ்ரீவல்லபன். (குலசேகரபாண்டியன்.) ஆகவராமன் மகன். விஜயநகர அரசனுன அச்யுதராயர் உதவியால் 1534-ல் பட்டத்துக்குவந்தான். "பாண்டியராஜப்ரதிஷ்டாபனுசாரியார்" எனப்பட்டமும்பெற்றுர்.

1534. கல்ஹரூபதேவ (ஒரிஸாவில் ஆண்ட கங்கவம்சக் கடைசியரச)னைக்கோவிந்தவித்யாதரன்கொலைசெய்து விட்டு, அப்பட்டத்தையும் அபகரித்துக்கொண்டான்

1540. வாராங்கல். மஹம்மதியரால் பாமினிராஜ்யத்தோடு சேர்த்துக்கொள்ளப்பட்டது.

1543-1552. பராக்ரமகுலசேகரன். அபிராமனுடையபுதல்வன்.

1546. ட்ரேண்ட் என்ற இடத்தில் நடந்தமஹாசபை. ரோமன்காதலிக் மதத்தாரின்கொள்கைகள் ஒருவாருய்நிர்ணயிக்கப்பட்டன.

1551-1559. முகுந்ததேவன். ஒரிஸாவிலாண்ட கங்கவம்சக்கடைசி அரசன். 1559-ல் ஜயபுரத்துக்கருகில் நடந்த சண்டையில், காலபஹுர் என்ற மஹம்மதியசேனைத்தலைவனுல் தோல்வியடைந்து இறந்தான். இவனுடன் கங்கவம்சமும் ஒரிஸாவில் ஹிந்துக்கள் ஆட்சியும் அற்றுப் போயின.

1552. (சகம் 1474)-1564. சாலீவாடிபதி. அபிராமபராக்ரம பாண்டியனுடைய 2-ஆம் குமாரன். தென்காசியில் பட்டாபிஷேகம் செய்விக்கப்பெற்றான்.

[T. A. S. (I).]

நெல்வேலிப்பெருமாள்
[=சாலீவாடிபதி]
(1552-1564)

| | |
|---|---|
| அதிவீரராமன். (1564—1596) | ஸ்ரீவல்லபன். |

1556-1605. அக்டர். தில்லியில் ஆண்ட முகல்சக்ரவர்த்தி.

1557. சித்தூர் பாழாக்கப்பட்டது.

1559-1563. விசுவநாதநாயக்கர். விஜயநகரத்தரசர் ப்ரதிநிதியாய் மதுரையில் ஆண்டவர். மதுரை நாயக்கர்வம்ச முதல் அரசர்.

1559. ஜயபூர் சண்டை. (1551-ஐப்பார்க்கவும்.)

1559. பண்டிதராஜ ஜகந்நாதகவி. ஆந்த்ரதேசம். தைலங்க வம்சத்தில் பிறந்த அந்தணர். இவர்தந்தை பேரம் பட்டர். இவர்தாய் லக்ஷ்மி. அக்பர்சக்ரவர்த்தியின் ஸமஸ்தானவித்வான் ஆனார். அக்பருக்கு ரஜபுத்ரி மனைவியிடம் பிறந்த லவவாஜி என்ற கன்னிகையை மணம்புரிந்தார். பிறகு காசிநகர்வந்துசேர்ந்து அப்பய்ய தீக்ஷிதரையும் கண்டார்.

இவர் இயற்றிய நூல்கள்—

1. ரஸகங்காதரம். (அலங்காரசாஸ்திரம்.)
2. பாமினீவிலாசம்.
3. பீயூஷலஹரி முதலானவைகள்.

1563-1573. குமாரகிருஷ்ணப்பநாயக்கன். மதுரை நாயக்கர்வம்ச 2-ஆம் அரசன்.

1564-1596. அதிவீரராமபாண்டியன். 1564 (சகம் 1486)ல் கொற்கையில் பட்டாபிஷேகம்பெற்றார்.

[3 செந்தமிழ் 119]

இவன் பிதா—நெல்வேலிப்பெருமாள்.

1567 (சகம் 1489-ல்) தென்காசிக்குலசேகரமுடையார்கோவில் பிரதிஷ்டை.

[தென்காசிச்சிலாலிபி.]

இவன் ஒரு ராஜகவி.

இவர் இயற்றிய நூல்கள்:—

1. நறுந்தொகை (வெற்றிவேற்கை.)
2. நைடதம்.
3. கூர்மபுராணம்.
4. காசிகாண்டம்.
5. கொக்கோகம். (முதலானவை.)

இவர் காலத்தவர்கள்:—

1. வரகுணன். (வாயுஸம்ஹிதை இயற்றியவர்.)
2. வரதுங்கபாண்டியன். (பிரமோத்தரகாண்டமியற்றியவர்.)
3. பரஞ்சோதி (திருவிளையாடற்புராணமியற்றியவர்.)
4. அழகிய தேசிகர். (சேதுபுராணமியற்றியவர்.)

—[7 விவேகபோதினி 93.]

(தொடரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர்,

பி. ஏ., பி. எல்.

# அச்சிட்ட குறுந்தொகையுரை.

---

குறுந்தொகையென்பது 'அமிழ்திற்சிறந்த தமிழ்மொழியதனை ஒன்பான் சுவையும் ஒழுகுற வளர்த்த நச்சும் பெருமை முச்சங் கத்துள்' கடைச்சங்கத்துச்சான்றோர்காலத்துத் தொகுத்த தொகை நூல்களுளொன்றென்பதைக் கற்றோர்பலரும் அறிவர்.

இது பண்டைக்காலத்துத் தண்டமிழ் நாட்டு அரசியல் வாணிகம் கைத்தொழில் முதலியவற்றின் நன்னிலையையும் தமிழ்மக்களின் வழக்கவொழுக்க நாகரிகங்களையும் செவ்வனே விளக்குந் திறத்தது. இந்நூலின் இருபது பாக்களொழிந்த மற்றப்பாக்களுக்கு நல்லறிவுடைய தொல்பேராசான் பொருள்புலப்படுத்தினனென்றும் அவர் புலப்படுத்தாதொழிந்த இருபது பாக்களுக்கும் இச்சகம்புகழும் நச்சினார்க்கினியர் பொருள் கண்டாரென்றும் கூறுப. இப்பேரறிவாளர்கள்கண்ட அரிய உரைகள் இந்நாள்வரையும் நமக்குக்கிடைத்தில. இவ்வுரைகளேயன்றி இக்குறுந்தொகைமூலந்தானும் ஈராண்டுகட்கு முன்னர்வரை அச்சுவாகனம் ஏறி வெளிவந்திலது. பண்டைச் செந்தமிழ்நூல்கள் பலவற்றை நாம் காலவயத்தாளிழந்ததுபோல் இதனையும் இழவாது திருக்கண்ணபுரதலத்துப்பண்டிதர் ஸ்ரீ சௌ. அரங்கசாமி ஐயங்காரவர்கள் பல ஏட்டுப்பிரதிகள்கொண்டு மூலபாடங்களையாராய்ந்து பாடாந்தரங்களுடனும் திணை உள்ளுறை இறைச்சி மேற்கோள் இலக்கணக்குறிப்பு முதலியவற்றுடனும் திட்பநுட்பஞ்செறியத் தம் நுண்மாணுழைபுலத்தான் ஓர் அரியவுரைகண்டு ஈராண்டுகட்குமுன்னர் வெளிப்படுத்தியுள்ளார்கள். இக்குறுந்தொகையை வெளிப்படுத்திய அப்பெருந்தகையாளர்க்குத் தமிழகம் பெரிதும் நன்றிபாராட்டுங்கடப்பாடுடையதே.

இங்ஙனம் இவர்கள்கண்டு வெளிப்படுத்திய உரையினுள் ஒரு செய்யுளுரையில் சிறிது முரண்பாடொன்று ஓரிடத்துக்காணக்கிடக்கின்றமையின் அதனைக்குறித்தே ஈண்டொரு சிறிது எழுதுகின்றேன். மிகையாயின் அறிஞர் பொறுக்க.

அவரோ வாரார் முல்லையும் பூத்தன
பறியுடைக் கையர் மறியினத் தொழியப்
பாலொடு வந்து கூழொடு பெயரும்
யாடுடை யிடைமகன் சென்னிச்
சூடிய வெல்லாஞ் சிறுபசு முகையே.

என்ற முல்லைத்திணையாகிய குறுந்தொகை ௨௨௧-ம் செய்யுளில் இரண்டாமடிக்குப் 'பறியினைக்கொண்டகையினராய் ஆயர்மறியினத்தோடு செல்ல' என உரைவரைந்து விசேடவுரையில் 'பறி'—'மீன் பிடிக்குங்கருவி' எனவும் வரைந்துள்ளார்கள். இச்சொற்குப் பொருள் இங்ஙனம் உரைப்பின் முல்லைநிலமாக்கட்கு மீன்பிடித்தற் றொழிலும் உண்டென்பது பெறப்படுமன்றோ? அங்ஙனமாயின் அவர்கட்கு மீன்பிடித்தற்செய்தியாண்டுக்கூறப்பட்டுளது? தொல்காப்பியம், நம்பியகப்பொருள் நிகண்டுகள் முதலிய தொன்னூல்களுள்ளும் ஆசிரியர் நச்சினார்க்கினியராதி தொல்லாசிரியருரையினுள்ளும் அவர்கட்கு மூவினம்புரத்தலும் பழுதிலுழவுதொழில்புரிதலும் வாணிபம்பேணலுமன்றி இத்தகைய மீன்பிடித்தற்செய்தியாண்டுங்கூறப்படவில்லையே. இஃதன்றி இவ்வுரையானே இந்நிலமாக்கள் மீனுண்டலும் வழக்கென்பதூஉம் பெறப்படுமன்றோ? அது பொருந்துமாறெங்ஙனம்? பண்டைத்தமிழ்நூல்களை யாராயுங்கால் இந்நிலமாக்கட்கு இவ்வொழுக்கம் உளவெனக்கோடற்கேற்ற ஆதாரமொருசிறிதும் பெறப்படுமாறில்லை. புலவூண்டுறத்தலாகிய பொய்யாவொழுக்கம் பண்டைத்தமிழ்மக்களுள் முல்லைநிலமாக்களாய ஆயருள்ளும் மருதநிலத்து வேளாளருள்ளுமே அங்குரித்திருந்ததென்பது சங்கத்துச்சான்றோர் செய்யுள்களை நுனித்தாய்பவர்கட்கெல்லாமினிது புலனும். அமிர்தமயமாய ஆன்பயத்தினுஞ்சிறந்ததோருணவு யாது? அத்தகைய உணவையும் எண்வகைக்கூலங்களையும் இயற்கையிற்பெற்ற அவர்கட்கு இழிதகையவுணவுகளெற்றிற்கு. அஃதன்றியும் அவர்களை அங்ஙனம் சாகபக்ஷணிகளாக ஆக்கியது அவர்கள் மேற்கொண்ட மூவினம்புரத்தலாகிய ரக்ஷைத் தொழிலும் உறையுமிடமாகப்பெற்ற முல்லையம்புறவுமாம். இவர்களிவ்வுத்தம வொழுக்கினராயிருந்தமையானன்றோ இவர்களை "ஆகாத் தோம்பி ஆப்பய னளிக்குங், கோவலர் வாழ்க்கையோர்

கொடும்பா டில்லை" யெனக் "நாணு வுயிர்க்கும் கையற் றேங்கும்" கவுந்தியடிகள் ஆயர்மரபினளாகிய மாதரியை நோக்கிக்கூறியதாக இளங்கோவடிகளும், "தருமகதியாய்ப்பாடி" யெனப் பின்னோரும் கூறுவாராயினர்.

இனிப் பத்துப்பாட்டில் பெரும்பாணாற்றுப்படை மலைபடுகடாம் முதலியவற்றுள் ஆற்றுப்படுப்போன் ஆற்றிடைப்பெறவிருக்கும் நிலமாக்கள் உணவுவகைகளைக்கூறுமிடத்து முல்லைநிலமாக்கள் உணவிற்கும் மற்ற நிலமாக்கள் உணவிற்கும் எத்துணையோ பேதம்பட ஓரிடத்தாயினும் முல்லைநிலமாக்கள் புலவுண்ணும் இயல்புடையோரெனக்கோடற்குச்சிறிதுமிடனில்லாமலே "வடவயின் விளங்கும், சிறுமீன் புரையுங் கற்பி னறுநுதல், வளைக்கை மகடூஉ வயினறிந் தட்ட, சுடர்க்கடைப் பறவைப் பெயர்ப்படு வத்தந், சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத், துறப்புறு பசுங்காய்ப் போழொடு கறி கலந்து, கஞ்சக நறுமுறி யளைஇப் பைந்துணர், நெடுமரக் கொக்கி னறுவடி விதிர்த்த, தகைமாண் காடியின் வகைபடப் பெறுகுவிர்" என அந்தணராகியவுயர்ந்தோர் தம் உணவுவகைகளைக்கூறியாங்கே தொல்லிசைப்புலவர்கள் கூறிச்செல்லுகின்றார்கள்.

"மடிவாய்க் கோவலர் குடிவயிற் சேர்ப்பி
னிருங்கிளை ஞெண்டின் சிறுபார்ப் பன்ன
பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவிர்
நெடுங்குரற் பூளைப் பூவி னன்ன
குறுந்தாள் வரகின் குறளவிழ்ச் சொன்றி
புகரிணர் வேங்கை வீகண் டன்ன
வவரை வான்புழுக் கட்டிப் பயில்வுற்
றின்சுவை மூரற் பெறுகுவிர்" (பெரும்பாண்)

பாலும் விதவையும் பண்ணாது பெறுகுவிர் (மலைபடுகடாம்) என்ற அடிகளை நோக்கிக்கொள்க. 'பண்ணாது பெறுகுவிர்' என்பதற்கு 'நுமக்கென்று சமையாமல் தமக்குச்சமைத்திருந்தவற்றைப் பெறுகுவிர்' என அதன் உரையாசிரியர் உரை உரைத்து அம்மக்கள் தம் பேரருளுடைமையும் விளக்கவைத்துள்ளார். இப்பத்துப்பாட்டாதி பண்டையநூல்களெல்லாம் பண்டைக்காலத்து மக்களது

உண்மையொழுக்கை உள்ளபடி விரித்துரைக்கும் இயல்புடையவன்றோ? மற்றமாக்கள் உணவுவகைகள் இங்குக்குறித்துள்ளபடி கூறப்படாது வேறுவகையாகக்கூறப்பட்டிருப்பது சிந்திக்கத்தக்கதாம். பழைய தமிழ்நூல்களில் முல்லைநிலமாக்கள் தெய்வவழிபாடு செய்ததாகக்கூறுமிடனெல்லாம், பாற்சோறு ஒன்றுமட்டுமே இட்டு வழிபட்டதாகக்கூறுதலும் மற்றையோர்க்குக்கூறியதுபோல் தினைச்சோறு முதலாயின இட்டதாகக்கூறாமையும் ஈங்கு ஆராயத்தக்கது. தற்காலத்து ஆயர்மரபினருள் சிலர் இங்குக்கூறிய வொழுக்கிற்கு வேறுபடக்காணப்படுகின்றார்களேயெனின் அவரெல்லாம் இழிசனர் கூட்டுறவான் வழீஇயினரென்க. ஆகையால் 'பறி' யென்பது "பறி பிறி—செல்விற்பருவரால்பாயுநெடுநாடா" † "குறியிறைக்குரம்பைப் பறியுடைமுன்றில்" என்றவைபோன்ற இடங்களில் பண்டிதாவர்கள் கொண்டுள்ள பொருளில் பயின்றுள்ளதேனும் ஈண்டைக்கது இயைபுடைத்தாம் பொருளன்று. இயைபுடைத்தாம் பொருள் யாதோவெனிற்கூறுவல்: 'பறி' ஆயர் ஆனிரைக்காவல்புரியுங்கால் இராவிடைப் படுத்துத்துயில்வதற்குப் பனையோலைகளான் அமைத்துக்கொண்ட சயனமென்க. இச்சொல் இப்பொருளில்,

"கொண்டதாளுறிக்கோலக்கொடுமழுத்
தண்டினர்பறியோலைச்சயனத்தர்
விண்டமுல்லையரும்பன்னபல்லினர்
அண்டர்மிண்டிப்புகுந்துநெய்யாடினர்"

(2-வது வண்ணமாடல்)

என்ற பெரியாழ்வார் திருமொழியினும் பயின்றுள்ளது. அஃதன்றியும் "பறியோலைமேலோடுகீழாவிடையன்" எனத் திணைமாலைநூற்றைம்பதினும் வந்துளது. அதற்கு அதனுரையாசிரியர் "படுத்துத் துயிலும் பறி கீழாக ஓலைப்படல்புதைத்துத் துளியைக்காத்தற்கு மேலாக இடையர்கிடந்து" என்றுரைத்தார். "பறிப்புறத்திட்ட பாலுடையிடையன்" என நற்றிணை இடைக்காடனார் செய்யுளினும் (கசஎ) "மறித்துருத்தொகுத்தபறிப்புறவிடையன்" என நெடுந்தொகையினும் பயின்றுள்ளது. நற்றிணை உரையாசிரியர் பறி பனையோலையானமைத்துக்கொண்டபாயல், எனவே வரைந்துள்ளார்.

† பெரும்பாண். உகூ.

இனி இக்குறுந்தொகைச்செய்யுளிலேயே 'கூழ்' என்பதற்கு ஷெ பண்டிதரவர்கள் 'உணவு', இழிந்தோருண்ணும் உணவுமாம்' எனவும் குறித்துள்ளார்கள். இதில் முன்னையபொருள் பொருந்துமேனும் பின்னையது பொருந்தாது. கூழ் என்பதனைத் தெண்ணீரடு புற்கையெனக்கருதினர்போலும். அங்ஙனம் கருதினும் வறியோர் உண்ணும் உணவுஎன்றன்றோ எழுதல்வேண்டும். இழிந்தோரெனக்கூறல் எங்ஙனம் பொருந்தும்? முல்லைநிலமாக்கள் உணவாகக்கூறுமிடனெல்லாம் கூழ் என்பதற்கு, பாற்'சோறு' எனக்கூறலே பொருந்தும். இதனை, *. 'கூழாரிடையன்' என்புழி ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரைத்த உரையாலறியலாம்.

ஆகையால் இவற்றையெல்லாம் நோக்குமிடத்து இங்குக்குறித்துள்ள சொற்களுக்கு யானுரைத்தபொருளே பல்லாற்றானும் பொருந்துமாற்றை அறிஞர் ஆய்ந்துகொள்வாராக.

இச்சொற்களின் உண்மைப்பொருள் காணுவேண்டி ஈண்டிதை எழுதினேனேயன்றி, குறைகாணக்கருதி எழுதினேனல்லேன். இற்றொடர்ந்து செற்றின்றகிடந்த பழம்பிரதிகளைத் தேடிப்பெற்று ஆய்ந்து சுத்தஞ்செய்து உரையெழுதலாய அரியவேலையைக்கைக்கொண்ட பண்டிதரவர்கள் இச்சிறு பதங்கட்கு வேறுபடப் பொருள் கண்டமைபற்றி அவர் சிறிதும் இழிக்கப்படார். இன்னும் அவர்கள் இத்தகைய உதவியைத்தமிழிற்குப்புரிவார்களாயின் அது பெரிதும் பயன்படத்தக்கதாம். இவ்விஷயமாக ஷெ பண்டிதரவர்கட்கு எழுதியுள்ளேன். அதனையவர்கள் மறுபதிப்பில் வெளியிடக்கூடுமேனும் மறுபதிப்பு வெளிவரலை ஒருதலையாகக்கொள்ளமுடியாமையின் ஈண்டெழுதநேர்ந்தது. சுபம்!

18—7—18, மதுரை.

ஆ. கார்மேகக்கோன்,
தமிழ்ப்பண்டிதர்,
அமெரிக்கன் காலேஜ்.

* பெரும்பாண். ௧௬௫.

# ஓர் ஐயவினா.

ஐயா,

தங்களுடைய ஆனிமீ சஞ்சிகையில் பிரஹ்மஸ்ரீ R. S. நாராயணஸ்வாமி ஐயர் அவர்கள் B.A., B.L., என்பார் இந்துதேசசரித்திர காலக்குறிப்புகள் என்னும் தலைப்பின்கிழ் "ஸாயன ஆசாரியர் மரணம் 1387. ஜாயனர்—ரிக்வேதம் முதலான பூர்வ ஸம்ஸ்க்ருத நூல்களுக்கு உரையெழுதிய ப்ரசித்தமான வியாக்கியாதா 2-ம் ஹரிஹர ராஜன் மந்திரியான மாதவாசாரியருடைய சகோதரர் ஸாயனர்" (பக்கம் 417) "2-ம் சங்கமர் 2-ம் ஹரிஹரர் இவர்களுடைய மந்திரியாயிருந்தார் (பக்கம் 418 செந்தமிழ்) என்றெழுதியிருக்கிறார். ஆனால் ரிக்வேதத்தின் ஒவ்வொரு அத்தியாயத்தின் அடியிலும் "இதி ஸ்ரீமத் ராஜாதிராஜ ராஜ பரமேச்வர வைதிகமார்க்கப்ரவர்த்தக ஸ்ரீவீரபுக்கபூபால ஸாம்ராஜ்யதுரந்தரேண ஸாயணாமாத்யேன (ஸாயணாசார்யேணவென்றும் சொல்லப்படுகிறது) விரச்சிதேமாதவீயே வேதார்த்தப்ரகாசே ரிக்ஸம்ஹிதாபாஷ்யே—அஷ்டகே—அத்யாய:" எனமுடிப்பதன் கருத்து எனக்குப் புலப்படவில்லை. மேலும்,

> வ்யாக்யாயாக்யஹுதப்ரக்ஞ:ஸப்தமஸ்யத்விதீயகம்,
> அத்யாயம்ஸாயணாமாத்யஸ்த்ருதீயம்வியாகரோத்யத.

என்றும் சொல்லப்படுகிறது.

இவற்றால் ஸாயணர் வீரபுக்கமஹாராஜன் மந்திரியென்று வெளிப்படுவதால் அவ்வீரபுக்கன் I-ம் புக்கனாகவேயிருக்கவேண்டும். ஏனெனில் 2-ம் புக்கர் 1399-ல் பட்டத்துக்கு வந்ததாக செந்-418-ம் பக்கத்திற் சொல்லப்படுகிறது. அற்றேல் 1376-ம்ஆண்டு வரையில் அரசுசெய்திருந்த 1-ம் புக்கருடைய காலத்துக்குப்பிறகு II-ம் சங்கமரிடத்து மந்திரியாயிருந்து அதற்குப்பின் 2-ம் ஹரிஹரர்காலத்திலும் மந்திரியாயிருந்திருக்கவேண்டும். அவர் ரிக்வேத பாஷ்யஞ்செய்தகாலம் வீரபுக்கர் காலமாகவே யிருந்திருக்கவேண்டும்.

நமது நண்பரவர்கள் ஸாயணர் வீரபுக்காது மந்திரியாராக விருந்தாராவென்ற விஷயத்தைப்பற்றியும் அவர் அப்போதுதான் வேத

வியாக்கியானங்கள் செய்தார் என்பதைப்பற்றியும் வேறு ஆதாரங்கள் எடுத்துக்காட்டுவோராயின் அவர்க்குப்பெரிதும் நன்றியறிவுள்ளவனு யிருப்பதுடன் அவ் வுதவியையும் எனது ரிக்வேத மொழிபெயர்ப்பில் பிரசுரிப்பேன். II ஹரிஹரர் யார்? ஸாயணர் மாதவருக்கு மூத்தவ ரா இளையவரா வென்ற விஷயத்தையும் விளக்கவும்.

The Vedic Bureau
Anandasrama,
Coonori, Nilgires
2nd September 18.

தங்கள் விதேயன்,

SIVADHYANANANDA.

P. S. ஸாயணர் குருவென மதிக்கும்படியுள்ள வித்தியாதீர்த்தர் யார்? இவ்வேதவுரைக்கு மாதவீயம் என்ற பெயர்வரக்காரணமென்ன? இவற்றையும் எனக்குத் தெளிவிப்பாராயின் அவர்க்கு யான் எழுமையும் கடப்பாடுடையேனுவேன்.

---

ஸ்ரீ:

# சேரமான் பெருஞ்சேரலாதன்.

---

பண்டைக்காலத்துத் தண்டமிழ்வேந்தர் மூவருட் சேர்குடியிற்றோன்றிச் செங்கோல் செலுத்திய அரசர்களிற் சேரமான் பெருஞ்சேரலாதன் ஒருவன் என்பது அவன் பெயர் மாத்திரத்தானே யறிந்தது.

இனி, செந்தமிழ்த்தொகுதி 16 பகுதி 2-ல் 76-ஆம் பக்கத்தில் இவனைக் குறித்தனவாகச் சிலவரிகள் காணப்படும். * அவை, "மேல் கடலோரத்தில் இத்தொண்டியைப்போலவே மாந்தையும் ராஜதானி நகராய்ப் பெருஞ்சேரலாதனுலாளப்பட்டுவந்தது. இப்பெருஞ்சேரலாதன்காலத்து நெடுஞ்சேரலாதனுங் குடபுலத்துஅரசாண்டவன். சேரவரசர்கள் குடபுலத்தைச் சிறிய பகுதிகளாய்ப்பிரித்துப் பலராக ஆண்டுவந்தனரென்றே தெரிகிறது" என்பனவாகும். இவற்றைச் சிறிது முன்னும் பின்னுமாக உள்ளவற்றோடு நோக்குவார்க்குப்

* ஒரு விஞ்ஞாபனம் என்ற தலைப்பின் கீழ்க்காண்க.

பெருஞ்சேரலாதன் ஒருசிற்றரசனென்ற கொள்கையே மேற்குறித்த வாக்கியங்கள் வெளியிடுகின்றன என்பது இனிது விளங்கும்.

இனி, இக்கொள்கை முன்னூல்களுடன் முரணுவதாகத்தோற்றுவதால், சங்கநூலாராய்ச்சியிற் பிரவேசிக்கும் மாணவர்கள் இடர்ப்படாதவாறு ஈண்டுண்மையுரைத்தல் இன்றியமையாததாயிற்று.

இச்சேரன் புறநானூற்றில் 65ஆம் பாடல்பெற்றவன் என்பதைக் கற்றோர்பலருமறிவர். அதனால் இவன் சோழன் கரிகாற்பெருவளத்தானோடுபொருது புறப்புண்ணாணி வடக்கிருந்த செய்தியுணரப்படும். அங்ஙனம் இருவேந்தரும் பொருத போர்க்களம் வெண்ணி என்பது 66ஆம் புறப்பாட்டானறியலாவது. அச்செய்யுள் கரிகாலன் வென்றி கூறியதாகும். அது,—

"நளியிருமுந்நீர் நாவாயோட்டி
வளிதொழிலாண்ட உரவோன்மருக
களியியல்யானைக் கரிகால்வளவ
சென்றமர்க்கடந்தநின் னாற்றல்தோன்ற
வென்றோய்நின்னினு நல்லனன்றே
கலிகொள்யாணர் வெண்ணிப்பறந்தலை
மிகப்புகழுலகமெய்திப்
புறப்புண்ணாணி வடக்கிருந்தோனே." என்றுள்ளது.

இதிற் புறப்புண்ணாணி வடக்கிருந்தோன்—பெருஞ்சேரலாதனென்பது தேற்றம்.

இனி, முடத்தாமக்கண்ணியார்பாடிய பொருநராற்றுப்படைக்கு இக்கரிகாலனே பாட்டுடைத்தலைவனாதல் நன்கறிந்தது. அதில், அவனுடைய வெற்றிப்புகழ்விளங்க,

"இரும்பனம்போந்தைத்தோடுங்கருஞ்சினை
யரவாய்வேம்பினங்குழைத்தெரியலு
மோங்கிருஞ்சென்னிமேம்படமிலைந்த
விருபெருவேந்தருமொருகளத்தவிய
வெண்ணிற்றாக்கியவெருவருநோன்றாட்
கண்ணார்கண்ணிக்கரிகால்வளவன்" எனவருதல் காணப்

படும். இது 66ஆம் புறப்பாட்டிற்கண்ட வெண்ணி என்னும் ஊர்ப் புறத்தேநிகழ்ந்த அப்போரினையே குறித்ததாதல் நன்கு தெளியப் படும். இதில் இருபெருவேந்தரென்றது, சேரனையும் பாண்டியனை யும். அவர்களில் அச்சேரன் பெருஞ்சேரலாதனேயென்பது 65ஆம் புறப்பாட்டாற் பெறப்பட்டது. ஆகவே பெருஞ்சேரலாதன் பெரு வேந்தனாதல் வெளிதினுணரப்படும். ஆதலால் அவன் ஒரு சிற்றரச னென்ற கொள்கை தவறுதல் சொல்லாமையே அமையும்.

இனிக் குடக்கோநெடுஞ்சேரலாதனும் சேரமான்பெருஞ்சேர லாதனும் ஒரேகாலத்தரசாண்டவரென்ற கொள்கையும் பொருந்துவ தின்று. நெடுஞ்சேரலாதன் பெருவேந்தனென்பது முன்னரே செந் தமிழில் வெளிவந்த 'யானைக்கட்சேய்மாந்தரஞ்சேரலிரும்பொறை' என்ற வியாசத்தில் நன்கு விளக்கப்பட்டது. அங்ஙனமாகவே இரண்டு பேரரசர்கள் ஒரேகாலத்திற் சேரநாட்டில் வதிந்தனரென் பது வியப்பைத்தருவதேயாகும்!

ஒரு மாணவன்.

---

உ

கடவுள்துணை.

## மக்கட்கின்றியமையாக்கொள்கைகளுட் சில.

இத்தலையங்கத்திற்குப் பொருந்துவனவென்றெண்ணி என்னால் மேலே கூறப்பெறும் விஷயங்கள் மதுரைக்கடைச்சங்கத்தாராலே தொகுக்கப்பெற்றதும், நம்முன்னோருடையவும் நமது நாட்டுடையவு மாகிய 'பண்டைப்பெருமைகளை விளக்கவல்லதும், எட்டுத்தொகைய னுள் எட்டாவதாகியதுமான''புறநானூற்றிலிருந்து தொகுப்பனவையா கும்.

அப்புறநானூறு, நமதுமுன்னை அரசர்களுடைய சரித்திரங்களை யும், பண்டைப்புலவர்களுடைய ஆழ்ந்தகருத்துக்களையும் அக்காலத் திய ஒழுக்கவழக்கங்களையும் நமக்குத்தெரிக்கும் ஒரு உயர்தரநூலாகு

மென்பது அனைவர்க்கும் ஒப்பமுடிந்ததொன்றாதலின், செந்தமிழ்படிக்கும் மாணாக்கர்கட்குதவுமாறு இவ்வியாசம் ஈண்டு எழுதப்படுகிறது. அதனுட்காணப்பெறும் பிழைகளைப்பொறுத்தல் பெரியோரதுகடனாம்.

## கல்வி.

இந்நூல் "கல்லாதவனை அவனைப்பெற்றதாயும் மதியாள். ஒரே தாய்வயிற்றிற் பிறந்திருப்பினும் அவருட் படிக்காதமூத்தோனை அரசன் அழையான்; சிறப்புச்செய்யான்; ஆனால், அவருட் படித்தவயதிற் சிறியவனையே அழைப்பன்; சிறப்புச்செய்வன்; அவனொடாலோசனை செய்து அவன்வழிநடப்பன். கற்காதமேற்குலத்துப்பிறந்தவன் கற்றுவல்ல கீழ்க்குலத்தானை வழிபடுவன். ஆகவே, எவரும் சிறிதுங்குறைபாடின்றி ஆசிரியரைவழிபட்டுக் கற்கவேண்டும். அஃதொன்றே முதன்மையானது" என்று நம்மவருக்குப் போதிய காரணகாரியங்களுடன் வற்புறுத்திக்கூறி அதனைக்கைக்கொளும்வழியையும் 'மக்கட்குவேண்டிய அனைத்தையும் ஈயவல்ல உற்றதுணையாவது கல்வியே' என்று கூறும் பிறநூல்களைப்போலக் கற்பிக்கிறது. அதற்குச் செய்யுள்:—

உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்ற னன்றே
பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளுஞ்
சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியு
ரு. மொருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளு
மூத்தோன் வருக வென்னா தவரு
ளறிவுடை யோனா றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே. (புறம்-கஅங)

---

## நல்லிணக்கம்.

"ஒருவரதுயர்ச்சிக்குக் கற்றல் ஒன்றே போதியதாகாது. ஆனால் அவர் நல்லாரோடுகூடவேண்டும்; அன்னாருடைய குணாதிசயங்களைத் தெரிந்துகொள்ளவேண்டும். அவற்றின்வழி நடத்தல்வேண்டும்" என்று

பொருள்படும்வண்ணம் உலகத்தியற்கைகூறுமுகத்தான் இக்கொள்கை அவசியமானதென்பதை இந்நூல் நமக்குநன்குவிளக்குகிறது. அதற்குச் செய்யுள்:—

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவ ராடவ
ரவ்வழி நல்லை வாழிய நிலனே. (புறம்-௧௮௭)

---

## முயற்சியும் நட்பும்.

"கற்று வல்லவராயினும் முயற்சியின்றிச்சோம்பியிருப்பின் அன்னோர் எவ்வித அற்பப்பயனையும் அடையமாட்டார். இஃது அறிவுடையோர் அனைவர்க்கும் ஒப்பமுடிந்ததொன்றாகலின் எவரும் முயற்சியுடையவராயிருக்கவேவிரும்புவர். அதனோடு குறுகியமனமுடையவர்களாயிருக்க விரும்பார். எனவே, எவரும் பெரியமுயற்சியும் தாராளசிந்தையும் உள்ளவராயிருக்கவேண்டு மென்பதும், அத்தகையாளரது நட்பையே விரும்பவேண்டுமென்பதும் ஏற்படுகின்றன" என்ற இக்கொள்கையை இந்நூல் உதாரணமுகத்தான் நமக்கு நன்கு விரித்துக் கூறுகின்றது. அதற்குச்செய்யுள்:—

வினைபதச் சிறிட நோக்கி வளைகதிர்
வல்சி கொண்டளை மல்க வைக்கு
மெலி முயன் றனைய ராகி யுடையதம்
வளன்வலி யுறுக்கு முளமி லாளரொ
டியைந்த கேண்மை யில்லா கியரோ
கடுங்கட் கேழ லிடம்பட வீழ்ந்தென
வறைவ னுண்ணா தாகி வழிநாட்
பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்
திருங்களிற் றொருத்த னல்வலம் படிக்கும்
புலிபசித் தன்ன மெலிவி லுள்ளத்
துரனுடை யாளர் கேண்மையொ
டியைந்த வைக லுளவா கியரோ. (புறம்-௧௧௰)

---

## கடமை.

"எவரும் அமிர்தமாயினுந்தனித்துண்ணல்கூடாது. எவரையும் வெறுத்தல்கூடாது. உடலின் சிரமத்திற்குப்பயந்து வேலைசெய்யாது சோம்பியிருத்தல் கூடாது. உயிரைக்கொடுத்தும் புகழைக்கைக் கொள்ளவேண்டியது. உலகம்வரினும் பழிக்கத்தக்கவற்றைச் செய்ய லாகாது. கவலையைநீக்கவேண்டும்" என்ற பல உயர்தரக்கருத்துக் களை உலகம் நிலைபெறுவதற்குக் காரணங்கூறுமுகத்தான் விளக்கி ஒருவரது கடமை இவை இவை என்பதை இந்நூல் நமக்கு நன்கு அறிவிக்கின்றது. அதற்குச் செய்யுள்:—

உண்டா லம்மவிவ் வுலக மிந்திர
ரமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனி
னுலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்வில
ரன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே. (புறம்-கஅ௨)

## நிலையாமையும் விதியினுயர்வும்.

"விதியினும் முயற்சி வலியுடைத்தென்றெண்ணுதல் குற்ற முடைத்தாம். எதனிடத்தும் பற்றுவைத்தல் அன்னார்க்குப் பின் னர்த்தீங்கை விளைவிக்கும். எதனிடத்தும் விருப்புவெறுப்பின்றிப் பொதுநோக்காயிருக்கவேண்டும். சரீரம் நிலையற்றதென்பதை யுணர்ந்து அதற்குத்தக ஒழுகவேண்டும்." என்ற பல உறுதியுரை களைக் கூறுமுகத்தான் இந்நூல் நமக்கு ஊழின் உயர்வையும் யாக்கை நிலையாமையையும் நன்குவிரித்துரைக்கின்றது. அதற்குச்செய்யுள்:—

யாது மூரே யாவருங் கேளிர்
தீது நன்றும் பிறர்தர வாரா
நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
வினிதென மகிழ்ந்தன் றுமிலமே முனிவி

னின்னா தென்றது மிலமே மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை யிகழ்த லதனினு மிலமே. (புறம்-௧௯௨)

---

## செல்வம்.

“செல்வத்தாலாயபயன் பிறருக்கு (தம்மையிரப்போர்க்கு) இல்லையென்னாது கொடுத்தலே. அங்ஙனமின்றித் தாமே அனுபவித்தல் பல குற்றங்களுக்கு ஆதாரமானது. எங்ஙனமெனில், கற்றுவல்ல அரசனுங் கற்றறியாத மறவனும் உண்பதிலும் உடுப்பதிலுஞ் சமமானவரே. ஆதலிற் செல்வர் தம்மை இந்திரனாவெண்ணிச் செருக்கடைந்து சேற்றுளழுந்தாது பெரும்பயன் அடைதல் ஏற்புடைத்து” என்ற உண்மையுரைகளை இந்நூல் நமக்குவலியுறுத்துகின்றது. அதற்குச்செய்யுள்:—

தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கு
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கு
முண்பன நாழி யுடுப்பன விரண்டே
பிறவு மெல்லா மோரொக் கும்மே
செல்வத்துப் பயனே யீத
றுய்ப்பே மெனினே தப்புன பலவே. (புறம்-௧௮௯)

---

## இறைமாட்சி.

“அரசனும் மக்களுள் ஒருவனாயினும் அவனதுகாவலின்றி எவரும் இனிதுவாழ்தல் முடியாது. ஆதலின், அவன் எவ்விதங்குடிகளை நடத்தவேண்டும்; எவ்வாறு வரிமுதலியவற்றை விதிக்கவேண்டும்; எவ்விதம் வசூல்செய்யவேண்டும்.” என்றவிஷயங்களை எவர்க்கும் எளிதில்

விளங்கவல்ல உதாரண முகத்தாற்கூறி அரசனது கடமையை இந்நூல் நமக்கு நன்குவிளக்குகிறதுடன் அவ்விதம் நடவாத அரசனுக்குவருந் தீங்குகளையும் நன்கு விரித்திருக்கிறது. அதற்குச் செய்யுட்கள்:—

காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகு
நூறுசெறு வாயினுந் தமித்துப்புக் குணினே
வாய்புகுவ ததனினுங் கால்பெரிது கெடுக்கு
மறிவுடை வேந்த னெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்து
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
* வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்
யானை புக்க புலம் போலத்
தானு முண்ணா னுலகமுங் கெடுமே. (புறம்-௧௮௪)

கால்பார் கோத்து ஞாலத் தியக்குங்
காவற் சாகா டுகைப்போன் மாணி
னூறின் றாகி யாறினிது படுமே
யுய்த்த றேற்றா னாயின் வைகலும்
பகைக்கூ ழள்ளற் பட்டு
மிகப்பல் தீநோய் தலைத்தலைத் தருமே. (புறம்-௧௮௫)

---

## இராஜபக்தி.

"தமக்கு எவ்விதஇடையூறுமுண்டாகாது காத்துவரும் அரசனைத் தங்கள்உயிரினும் உயர்வாகமதித்து அவன்வழிநடக்கவேண்டும். அது தான் குடிகளது முதற்கடமையாகும்"என்ற கொள்கையைக்காரணத் தோடு இந்நூல் நமக்கு நன்குதெரிக்கின்றது. இதனால் அரசனை நந்நாட்டார் தொன்றுதொட்டு எத்துணைஉயர்வாகமதித்துளார் என்பது ஒருவாறுபுலனாம். அதற்குச்செய்யுள்,

---

* இவ்வடி மந்திரிமார் எத்தகைய கொள்கையுடையவராயிருக்கவேண்டுமென்பதை விளக்குவதையும் அதனுரைகொண்டு உய்த்துணர்ந்துகொள்க.

நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்
அதனால், யானுயி ரென்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே. (புறம்-௧௮௬.)

---

## வீடுபேறு.

"மண்ணுலகிற்பிறந்த எவருங் கடைசியாகவிரும்புவது வீடுபேற்றையே. வீடுபேறுவது கூற்றுவற்குத்தப்பிவாழ்வது. கூற்றுவற்குத் தப்புவதென்றால் பிறந்து இறந்துவருவதாகிய சுழலுக்காளாகாது அழியாப்பதத்தையடைவது. அவ்வீடுபேற்றிற்குத்தடையாயிருப்பது இல்வாழ்க்கையே. ஏனெனில், இவ்வுலகமேநிலையற்றது. அங்ஙனமாயின், நிலையில்லா உலகத்திலிருந்து அனுபவிக்கும் இல்வாழ்க்கை எங்ஙனம் நிலையுளதாதல்கூடும். எனவே, இல்வாழ்க்கை நிலையற்றதென்பது உறுதிப்படுகிறது. நிலையற்ற இல்வாழ்க்கை எவ்வாறு நித்தியமான அழியாப்பதத்தையளித்தல்கூடும். ஆகவே, வீடுபேற்றைவிரும்பியோர் இல்வாழ்க்கையினின்றும் விலகவேண்டும். இல்வாழ்க்கையைவிட்டு விலகுந்திடமில்லாதவராயின், அன்னார் அறிவுடையோராலும் நீதிநூற்களாலும் கூறப்படுகிற நல்லனவற்றைச்செய்து வீடுபேற்றையடையலாம். நல்லனவற்றையுஞ்செய்யச்சக்தியற்றவர்கள் தீயனவற்றைச்செய்யாது தம் வாணாட்களைக்கழித்தலால் வீடுபேற்றையடையலாம்" என்று எவரும் அனுஷ்டித்து எளிதில் வீடுபேற்றையடையக் கூடிய பல இலேசானவழிகளால் இத்தகைய மேலானகொள்கையை இந்நூல் நமக்கு நன்குபோதிக்கின்றது. அதற்குச்செய்யுட்கள்:—

அதளெறிந் தன்ன நெடுவெண் களரி
னொருவ னொட்டும் புல்வாய் போல
வோடி யுய்தலுங் கூடுமெ
னொக்கல் வாழ்க்கை தட்குமா காலே. (புறம்-௧௯௩.)

ஓரி னெய்தல் கறங்க வோரி
லீர்ந்தண் முழவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூவணி யணியப் பிரிந்தோர்
பைத லுண்கண் பனிவார் புறைப்பப்
௫. படைத்தோன் மன்றவப் பண்பி லாள
னின்னா தம்மவிவ் வுலக
மினிய காண்கித னியல்புணர்ந் தோரே. (புறம்-௧௯௪)

பல்சான் றீரே பல்சான் றீரே
கயன்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுட்
பயனின் மூப்பிற் பல்சான் றீரே
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
ரு. பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ
நல்லது செய்த லாற்றீ ராயினு
மல்லது செய்த லோம்புமி னதுதா
னெல்லாரு முவப்ப தன்றியு
நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே. (புறம்-ககரு)

செந்தமிழ்ச்செல்வர்களே, எனக்குத்தோன்றியவற்றை ஒருவாறு தொகுத்தெழுதினேன். நான்கொண்டபாகுபாடு சரியோ பிழையோ அதனை நிச்சயமாகச் சொல்லுதல் என்னாற்கூடாதது. ஆனால், இதனுட் கூறப்பெற்ற கொள்கைகள் மக்கட்கு இன்றியமையாதனவென்று சொல்லுவது பிழைபட்டதாகாது. நிற்க, இம்மாதிரியான கொள்கைகள் பலவற்றை இப்புறநானூறு நமக்கு நன்குவிளக்கிக்காட்டுகிறதாகையாலும் அவற்றை முற்றுமெழுதல் ஒரேகாலத்தில் முடியாதாகையாலும். ஒருவாறு சிலவற்றை எழுதலானேன். அன்றியுங் கூறப்புகுந்த அனைத்தையும் விரித்தெழுதல் வேண்டாமென்றெண்ணி அவ்வச்செய்யுட்களை ஆண்டாண்டுக்குறித்திருக்கிறேன். அவற்றையும் அவற்றின் உரைகளையுங்கொண்டு விஷயங்களை உய்த்துணர்ந்துகொள்க. சுபம்.

உவே. சா. வேங்கடராமன்,

தண்டமிழ்த்தொண்டன்.